Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2483)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 03 செவ்வாய்க்கிழமை (16.04.2013) பக்கங்கள் 20 ஓசை – 198



கொண்டாட்டம் 06


துணைத் தலைவர் 08


சம்பியன் 09


மின்சாரம் 10


புத்தாண்டுப் பரிசு 12


## ரணில் வடக்கு நோக்கி யாத்திரை மே தின ஏற்பாடுகள் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தவாரம் வடபகுதி நோக்கிய விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

வடக்கில் மூன்று தினங்கள் தங்கியிருக்கும் அவர் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும், வன்னிப் பகுதியின் சில பகுதிகளுக்கும் செல்லவுள்ளார்.

அனேகமாக எதிர்வரும் மே தினத்தை இலக்கு வைத்தே அவரது வடக்கு நோக்கிய யாத்திரை அமைந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (25)

## கடலில் மூழ்கி இளைஞர் மரணம்

### கசூரினா கடற்கரையில் விபரீதம்

(காரைநகர்)

காரைநகர் கசூரினா கடற்கரையில் நீராடிக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில் கோண்டாவிலைச் சேர்ந்த ஜெயகுரு (வயது-32) என்பவரே

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்ச் சங்கம் சீனாவில் உதயம்

(பீஜிங்)

சீனாவில் முதல் முறையாக தமிழ்க் கலாசார சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தலைநகர் பீஜிங் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலும் 70 இற்கும் அதிகமான தமிழ் நிபுணர்கள் இணைந்து இந்தச் சங்கத்தை உருவாக்கியுள்ளனர். புத்தாண்டு தினத்தில் பீஜிங் தமிழ்ச் சங்கம் என்ற இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன. பீஜிங்கைத் தளமாகக் கொண்ட இந்தியர்களால் உருவாக்கப்பட்டுள்ள இரண்டாவது சங்கமாக இது அமைந்துள்ளது.

ஏற்கனவே பீஜிங் மலையாளி சங்கம் என்ற அமைப்பு இந்தியர்களால் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலாசார நிகழ்வுகள் மற்றும் தமிழர்களின் ஒன்றுகூடல்களை பிரதான நோக்கங்களாகக் கொண்டு இந்தச் சங்கம் செயற்படவுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# 16 சிறுவர்களை காணவில்லை

## சிறுவர் இல்லத்திலிருந்து தப்பியோட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்கியிருந்த சுமார் 16 சிறுவர்கள் நேற்று முற்பகல் அங்கிருந்து திடீரெனக் காணாமல் போயுள்ளனர்.

குறித்த சிறுவர் இல்லத்தில் மேற்படி சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சில உரிமை மீறல் சம்பவங்களைத் தாங்கிக்கொள்ள முடியாமல் இந்தச் சிறுவர்கள் அங்கிருந்து தப்பியோடியதாக அங்கிருந்து எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச சார்புத்தன்மை அற்ற நிறுவனம் ஒன்றினால் நிர்வகிக்கப்பட்டு வரும் இந்தச் சிறுவர் இல்லத்தில் சிறுவர் உரிமைகள் மீறப்பட்டு வருவதினால் அங்கு தங்கியிருந்த 35 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

இச்சிறுவர்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அதேவேளை, நேற்று தென்மராட்சிப் பிரதேச செயலக நன்னடத்தை உத்தியோகத்தர் களநிலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருக்கிறார்.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக தக்வல்களை வெளியிட பிரதேச செயலக அதிகாரிகள் மறுத்துவிட்டனர். (02)

## நிபந்தனையற்ற உதவி இலங்கைக்கு கிடைக்கும்




(புதுடில்லி)

நிபந்தனையற்ற உதவிகளை இலங்கைக்கு வழங்குவது என்று இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

வெளிநாடுகளுக்கு உதவியளிக்கும் போது நிபந்தனைகளை விதிப்பதில்லையென அறிவித்துள்ள இந்தியா, உதவிபெறும் நாடுகளின் இறைமைக்குக் குந்தகம் விளைவிப்பதில்லை எனவும், தனது உதவிகளைக் கேட்கும் நாடுகளுக்கு வழங்குவதாகவும் கூறியுள்ளது. இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு வழங்கும் போது எவ்விதமான நிபந்தனைகளும் விதிக்கப்படமாட்டாது என்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## உதவித்திட்டங்களில் வெட்டு; பரிசீலிக்கிறது அமெரிக்கா



(வொஷிங்ரன்)

இலங்கையில் மேற்கொள்ளப்படும் நலன்புரி மற்றும் ஏனைய உதவித்திட்டங்களுக்கு அமெரிக்க அரசினால் வழங்கப்பட்டு வரும் நிதியுதவிகளைக் கணிசமான அளவு குறைத்துக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் ஆலோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

எதிர்கால உதவித்திட்டங்களின் போது நிதியுதவியில் குறிப்பிட்ட அளவு குறைப்புச் செய்ய வேண்டும் என்று இந்த ஆலோசனையில் தெரிவிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் வெங்காய உற்பத்தி

(வேலணை)

நெடுந்தீவில் உள்ள நன்னீர் பிரதேசத்தைச் சேர்ந்த சாராப்பிட்டி என்ற இடத்தில் பரீட் சார்த்த முறையில் தூவல் நீர்ப்பாசன முறையில் வெங்காயச் செய்கையினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை விவசாயப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் சிறுபோகத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு மானிய விலையில் வெங்காயத்தினை வழங்கி இந்தப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதன் மூலம் இந்தப் பரீட்சார்த்த முயற்சிகள் பயனுள்ளதாக அமையுமெனில் பெரும்போக காலத்திலும் அதிகளவில் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கும் விவசாய திணைக்களத்தினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றனர் என நெடுந்தீவுப் பகுதி விவசாயப் போதனாசிரியர் நா. கோகிலராஜன் தெரிவித்துள்ளார். (05)



## கூட்டமைப்பும் உதயன் பத்திரிகையும் வன்முறைக்கு தூபமிட்டன

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் உதயன் பத்திரிகையினதும் கடந்த காலச்செயற்பாடுகள் வன்முறைக்குத் துணை போவது போல் அமைந்திருந்தன என்றும்,

யாழ். உதயன் தமிழ்ப் பத்திரிகை அலுவலகம் மீதும், அதன் விநியோகஸ்தர்கள் மீதும் கடந்த காலங்களில் நடந்துள்ள தாக்குதல்கள் அரசாங்கத்தின் மீது அவதூறு ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு நடத்தப்பட்டவை என்று அமைச்சர் டக்ளஸ்

19 ஆம் பக்கம் பார்க்க

# அச்சுவேலி சித்திர வேலாயுதர் ஆலயத்தில் பதற்ற நிலையால் பொலிஸார் குவிப்பு

அச்சுவேலி வடக்கு சித்திர வேலாயுதர் கோயிலின் வருடாந்த உற்சவ ஆரம்ப விழாவில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக அப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக் கோயிலின் வருடாந்த உற்சவதினமான நேற்று கொடியேற்றத்துடன் பூஜைகள் தொடங்கும் வேளை ஆலயத்தின் குருக்கள் சபாபதி இராசரட்ணம் என்பவர் உற்சவகாரரின் வேண்டுகோளுக்கு இணங்காமல் தனது சுய விருப்பத்தில் செயற்பட்ட வேளை அக்கோயிலின் அன்றையதின உபயகாரர்களால் பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து அங்கு ஏற்பட்ட பதற்றநிலையினை தடுக்க அச்சுவேலிப் பொலிஸாரும், நெல்லியடிப் பொலிஸாரும் இணைந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.

இக் கோயிலின் பூஜைகள் அனைத்தும் வருடாவருடம் சிறப்பான முறையில் நடைபெற்று வந்தவேளை போன வருடமும் பூஜைகள் நடைபெறாமல் இருந்தன. கோயிலின் நிர்வாகம் தனக்கே உரியது என ஒரு சாராரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியிருந்தனர். இதனையடுத்து நீதிமன்றில வழக்கு தொடரப்பட்டு நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலின் ஆரம்ப ஸ்தாபகரன நாகர் என்பவரின் வழித்தோன்றலை சேர்ந்தவர்களும் 11 உபயகாரர்களுமே வருடாந்த உற்சவங்களைச் செய்து வருகினறனர். ஆனால் ஆலயத்துக்குரிய தேர் செய்துமுடிக்க முன்னர் செய்து வந்த, திருவெம்பாவை, நவராத்திரி என்பன தேர் செய்த பின்பு உபயகாரர்களின் பூஜைகளுக்கு இடம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. வழக்கு நடைபெற்றுவரும் வேளையில் நீதவானால் பூஜைகள் உபயகாரர்களால் எந்தவித இடையூறுமின்றி செய்ய இடமளிக்கபட வேண்டும் எனக் கூறப்பட்டது.

தற்போது ஆலயத்தினுடைய பூசகரும் தேர்த்திருவிழா உபயகாரருமான ஒருவர் வழக்கினை ஆதாரம் காட்டி மீண்டும் மீண்டும் பிரச்சினையை மேற்கொள்வதாக உபயகாரர்களால் கூறப்படுகிறது. ஆனால் ஆலயத்தின் குருக்கள் ஆலயத்தின் உரிமை தனக்கு எனக் கூறி தொடர்ந்து நடைபெற இருக்கும் 10 திருவிழாக்களையும் தானே தனித்து நின்று செய்யப்போவதாகக் கூறியவேளை உபயகாரர்களுக்கும் ஆலய பூசகருக்கும் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து அக் கோயில் பகுதியைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (15)

# வீதியில் சமாந்தர பயணம்; மாணவர்கள் நீதிமன்றுக்கு

(யாழ்ப்பாணம்)


வீதியில் சமாந்தரமாக சென்ற மாணவர்கள் ஐவரை எதிர்வரும் 23 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் 5 பேருக்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இவர்கள் சமாந்தரமாக பயணித்துக் கொண்டிருந்த வேளை, யாழ். நீதிமன்ற நீதிவான் அவ்வழியாக காரில் வந்துள்ளார். அந்தக் காருக்கு இடம்கொடுக்காது மாணவர்கள் ஐவரும் வீதியில் சமாந்தரமாகப் பயணித்துக் கொண்டிருந்துள்ளனர்.

குறித்த மாணவர்கள் 5 பேரும போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்ததாக நீதிபதியினால் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலின் பிரகாரம் 5 மாணவர்களும் யாழ். போககுவரத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன், வீதிகளில் சமாந்தரமாகப் பயணிப்பதை பாடசாலை மாணவர்கள் தவிர்த்துக் கொள்ளுமாறும், அவ்வாறு தவிர்க்கும் பட்சத்தில் வீதி விபத்துக்களை குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர கேட்டுக்கொண்டார். (25)



சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகத்தினர் முல்லைத்தீவு நந்திக்கடல் சவாரி திடலில் நடாத்திய மாட்டுவண்டி சவாரியின் போது...

# இன்று வசந்தவிழா

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் சித்திரைப் புதுவருடத்தினை முன்னிட்டு நடாத்தப்படும் வசந்தவிழா நிகழ்வு இன்று காலை 6.30 மணிக்கு வலி. வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திற்கு அருகில் அமைந்துள்ள சந்திர மௌலீஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வலி. வடக்குப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ். தாட்சாயினி வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# டெங்கு நோய்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் இருந்து டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகி ஒருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவருடன் இந்த மாதம் நேற்று வரை யாழ். போதனா வைத்திசாலையில் டெங்குநோய்த் தொற்றிற்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 32ஆக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## சிறுவிளம்பரம்

சகல வசதிகளும் கொண்ட காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு. குடியிருக்க அல்லது ஏதேனும் தொழிலுக்கு பாவிக்கக் கூடிய நல்ல சுற்றடாடலில் உண்டு.

தொடர்புகளுக்கு:
க.சீவறட்ணம் சிவராசா,
சம்பந்தர் ஒழுங்கை,
சுதுமலை தெற்கு.

(R/176)

# வவுனியா மாவட்டத்தில் திடீர் மரணங்கள் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா வைததியசாலையில் கடந்த வாரம் நடத்தப்பட்ட மரண விசாரணைகளின் அடிப்படையில் திடீர் மரணங்கள் அதிகரித்துக் காணப்பட்டதாகத் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் கடந்த 8 ஆம் திகதி வவுனியா நாகர் இலுப்பைக்குளத்தைச் சேர்ந்த சிவபாதம் தனுசன் வவுனியா வைத்தியசாலையில் மரணமடைந்த நிலையில் சடலத்தினை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி கலாநிதி பி.எம்.ஜெயவர்த்தன றேபீஸ் காரணமாக ஏற்பட்ட மரணம் என தெரிவித்ததன் அடிப்படையில் றேபீஸ் காரணமாக இடம்பெற்ற மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இதேவேளை 9 ஆம் திகதி மோகன் தமிழினி என்ற 7 வயதுச் சிறுமி கிணற்றில் வீழ்ந்து இறந்துள்ளதுடன் இச் சடலத்தினை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி நீரில் மூழ்கியதனால் ஏற்பட்ட மரணம் என அறிக்கை சமர்ப்பித்ததன் அடிப்படையில் நீரில்மூழ்கியதனால் ஏற்பட்ட விபத்து மரணம் என தீர்ப்பளித்ததாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தாலிக்குளம் பூவரசன்குளத்தைச் சேர்ந்த செல்வி நடராஜன் சோபிகா என்ற 20 வயதுடைய யுவதியின் சடலத்தினை சட்டவைத்திய அதிகாரி பிரதே பரிசோதனை செய்ததன் அடிப்படையில் தூக்கில் தொங்கியதனால் ஏற்பட்ட மரணம் என தெரிவித்ததன் அடிப்படையில் தூக்கில் தொங்கியதனால் ஏற்பட்ட மரணம் தற்கொலை என மரணவிசாரணை அதிகாரியான தன்னால் தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை நெடுங்கேணி வேலங்குளத்தை சேர்ந்த 53 வயதுடைய செல்வி சுப்பையா கலாரஞ்சினி, 85 வயதுடைய தயாருடன் வசித்து வந்த நிலையில் பாத்திரம் கழுவுவதற்கு கிணற்றில் நீர் எடுப்பதற்கு சென்ற சமயம் கிணற்றில் வீழ்ந்து மரணித்ததாக தாயாரால் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் சடலத்தினை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி ரி.பார்த்தீபன் நீரில் மூழ்கியதனால் ஏற்பட்ட மரணம் என அறிக்கையிட்டதன் அடிப்படையில் நீரிழ் மூழ்கியதனால் ஏற்பட்ட விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டதாகவும் தெரிவத்தார்.

அத்துடன் கடந்த 12 ஆம் திகதி வவுனியா செக்கடிப்பிளவில் 72 வயதுடைய திருமதி கந்தையா நல்லம்மா என்ற வயோதிபப் பெண் கிணற்றில் வீழ்ந்து இறந்ததாகச் சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ரி. பார்த்தீபன் மேற்படி மரணம் சேறு மற்றும் நீரினால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு இடம்பெற்ற மரணம் என தெரிவித்ததை அடுத்து சேறு மற்றும் நீரினால் இடம்பெற்ற மூச்சு திணறலால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (160)

# யாழ். விஞ்ஞான சங்க 20 ஆவது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தனது 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவை இம்மாதம் 17,18,19 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இந்த விழாவில் யாழ். விஞ்ஞான சங்கம் தனது வருடாந்த ஆய்வுப் பட்டறை நிகழ்வுகளை நடாத்தவுள்ளது. இதில் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பட்டதாரிகளுக்கான உயிரியல் விஞ்ஞானத்திற்கான மாணவர்களின் ஆராட்சி பற்றி விரிவுரை நடாத்தவுள்ளார்.

இதற்கு யாழ். விஞ்ஞான சங்கத்தின் தற்போதைய தலைவர் வைத்திய கலாநிதி மகப்பேற்றுத் துறைத்தலைவர் பவானி தலைமை தாங்குவார். அதனைத் தொடர்ந்து இரண்டாம் அமர்விற்குப் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமை தாங்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து பல்வேறு துறைசார்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்கப்படவுள்ளன. இவ் விழாவிற்கு ஆர்வலர்கள், விஞ்ஞானிகள், மாணவர்களை வருகைதந்து கலந்துகொள்ளுமாறு விஞ்ஞான சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (பா)

# பெண்ணிடம் சங்கிலி திருட்டு; கவரிங் நகையால் ஏமாற்றம்

நுணாவில் மேற்கு பகுதியில் ஆலயத் திருவிழாவுக்குச் சென்று கொண்டிருந்த பெண்ணின் சங்கிலியை அறுத்த திருடர்கள் அச்சங்கிலி கவறிங் என தெரிந்து ஏமாற்றமடைந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவத்திற்குச் சென்ற குறித்த பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலியைத் திருடர்கள் அபகரித்துக்கெண்டு தப்பியோடியுள்ளனர்.

எனினும் பெண் கூக்குரலிடாமல் சங்கிலி போனால் போகட்டும் என சாதாரணமாக கூறியதை அடுத்தே அவர்தான் அணிந்திருந்தது கவறிங் நகை என தெரிவித்தார்.

# பூநகரி நிலத்தடி நீரைப் பாதுகாக்க நீர்த்தேக்கங்களை ஆழமாக்க வேண்டும்

## கிளி.மாவட்ட விவசாய முற்போக்கு முன்னணி கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பிரதேச நிலத்தடி நீரைப் பேணுவதற்கு அப்பகுதியிலுள்ள நீர்த்தேக்கங்களை ஆழமாக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென கிளிநொசசி மாவட்ட விவசாய முற்போக்கு முன்னணி, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக குறித்த முனனணி ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பூநகரிப் பிரதேசத்தை அண்டிய பகுதிகள் அண்மைக்காலமாக உவர்நீராக மாற்றமடைந்து வருகின்றன. குறிப்பாக வன்னேரிக்குளம், அரசபுரம், பத்திரிப்பாய், குஞ்சுக்குளம் ஆகிய பிரதேசங்கள் உவர் நீராக மாற்றமடைந்து வருகின்றன.

எனவே, இதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் மண்டைக் கல்லாறு மூலம் கடல்நீர் உட்புகாமலும், நன்னீர் வெளியேறாதிருக்கவும் மண்டைக் கல்லாறில் பொருத்தமான இடத்தில் அணை அமைக்க வேண்டும்.

அத்துடன், மாவட்டத்திலுள்ள அனைத்துக் குளங்களிலும் நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும்.

இதேபோன்று நிலத்தடி நீர் இல்லை என இனங்காணப்பட்ட வேரவில் பிரதேசத்திலுள்ள பற்றைக்காட்டை அழித்து மேய்ச்சற்தரவையை உண்டாக்க வேண்டும். இதன்மூலம் வேரவில் பிரதேச மக்களுக்கு வீட்டுக்கொரு பால்மாடு வளர்த்தல் என்ற அடிப்படையில் பசுக்களை வழங்கிப் பால் உற்பத்தியில் ஈடுபட வழிவகை செய்ய வேண்டும்.

அத்துடன், வெறுமனே கடலுடன் கலக்கும் நாகபடுவான் கலிங்கு நீரை விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய வகையில் உரிய இடங்களில் சிறு, சிறு அணைகளை அமைத்து நீரைத் தேக்கி, கிராஞ்சி, வேரவில் பிரதேசத்திலுள்ள நீர் நிலையை உயர்த்த வேண்டும்.

நாகமுனை அணையைப் புனரமைத்து கடல்நீர் உட்புகாதவாறு தடுப்பதுடன், இதன்மூலம் வேரவில் மேய்ச்சல் தரவையையும், வலைப்பாட்டு நிலத்தடி நீரையும் பாதுகாக்க உதவ வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கருத்தமர்வு

இவ்வாண்டு க.பொ.த உயர்தரப பரீட்சைக்குத் தோற்றும் தலைத துறை மாணவர்களுக்கான முழு நிலா கருத்தமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை மீசாலை உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வரலாற்றுப் பாடத்தில் இலங்கை மற்றும் ஐரோப்பிய படவரைபு பற்றிய விளக்கங்கள வளவாளர் எஸ்.சுஜீகரனால் வழங்கப்படவுள்ளது. பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொளளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# யூனியன் வங்கிக் கிளையினால் தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சி



(யாழ்ப்பாணம்)

யூனியன் வங்கியின் யாழ். கிளையினரால் கடந்த வாரம் யாழ். நாவலர் வீதியிலுள்ள ரி.சி.ரி மண்டபத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு கிளை முகாமையாளர் திரு மதி.மனோகரி இராமச்சந்திரன் "விசேட வங்கிச் சேவை"கள் பற்றி விரிவுரையாற்றினார்.

தொடர்ந்து "முயற்சியாளரும் வியாபார அபிவிருத்தியும்" என்ற தொகுப்பில் IDB வியாபார ஊக்குவிப்பு முகாமையாளர் செ.ரஜினிகாந்தன், யூனியன் வங்கி நிறைவேற்று உத்தியோகத்தர் வினோத்குமார், நிதி முகாமைத்துவம் சிறந்த முறையில் முதலீடு செய்து இலாபமீட்டும் வகையில் வியாபாரத்தை அபிவிருத்தி செய்தல், நிதியினை சீரான வகையில் முகாமைத்துவம் செய்தல், நிதி தளும்பலிலிருந்து பாதுகாப்பு போன்றவற்றை கையாளும் வழிமுறைகள் பற்றியும் விரிவுரையாற்றினார். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான விசேட கடனுதவிகளைப் பற்றிய விளக்கவுரையும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டன. (105)

# வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் மகளிருக்கான வாழ்வாதாரத் திட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் மீளக்குடியமர்ந்த மற்றும் புனர்வாழ்வு பெற்ற குடும்பங்களைச் சேர்ந்த 2 மகளிருக்கான வாழ்வாதாரத் திட்டமொன்றை முன்வைத்துள்ளது.

இத்திட்டமானது வடமராட்சி பகுதியிலிருந்து மகளிர் இருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு கடனடிப்படையில் முச்சக்கரவண்டி ஒன்றைப் பெற்றுக் கொடுத்தலாகும்.

அவர்கள் பாடசாலை செல்லும் மாணவர்கள், வைத்தியசாலைக்குச் செல்லும் .தாய்மார்கள் மற்றும் குடும்பத்துடன் வருபவர்களை மாத்திரம் ஏற்ற வேண்டும். இளைஞர்களை ஏற்றககூடாது. இச்செயற்றிட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் இப்பிரதேசத்தில் மேலும் பெண்களுக்கு முச்சக்கர வண்டிகளை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இவர்கள் தினமும் உழைக்கும் பணத்தில் 500 ரூபாவை நிறுவனத்திடம் செலுத்த வேண்டும். மீதிப்பணத்தை சேமிப்பில் வைத்து தாங்கள் ஓடிய முச்சக்கர வண்டியை நிறுவனத்திடமிருந்தே பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்திற்குரிய பயனாளிகள் தெரிவுக்காக விரைவில் விண்ணப்பப்படிவங்கள் நல்லொழுக்க நிறுவனத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும். பயனாளிகள் நேர்முகப் பரீட்சை மூலமே தெரிவு செய்யப்படுவர்கள் என நல்லொழுக்க நிறுவனத் தலைவர் தெரிவித்துள்ளார். (109)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் வீரமனை கன்னிமாா எனப் போற்றப்படும் கௌரியமமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெறவுள்ளது. இவ் உற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

# வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(தொடர்ச்சி...)

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தபட்ட வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வலயக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,.

பிரிவு - 1

**இசையும் அசைவும்**

மு.தமிழாயினி (யா/கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை), ச.அவந்திக்கா (யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), க.ஹம்சிகா (யா/புற்றளை ம.வி), சி.மேரிமதுசா (யா/செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை).

**இசை - தனி பிரிவு - 1**

ஸ்ரீ.சிறிதரன் (யா/பருத்தித்துறை சித்திவிநாயகர்), பி.ஞானதீபன் (யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை), வி.சஞ்சித் (யா/ஹாட்லிக் கல்லூரி).

பிரிவு - 3

சி.ரமணன் (யா/ஹாட்லிக் கல்லூரி), பி.தீபிகா (யா/வட இந்து மகளிர் கல்லூரி), ர.விதுர்சனன் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), தி.நிகாசன் (யா/தேவரையாளி இந்துக் கல்லூரி).

பிரிவு - 4

ஸ்ரீ.பிரதீப்குமார் (யா/வேலாயுதம் ம.வி), ஜெ.லாவன்யா (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சி.டயன்சன் (யா/நெல்லியடி ம.ம.வி), சி.சங்கவி (யா/வட இந்து மகளிர் கல்லூரி).

பிரிவு - 5

சி.நிதர்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி), த.தர்சிகா (யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்), யே.ரூபிகா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**திறந்தபோட்டி வில்லுப்பாட்டு**

யா/ஹாட்லிக் கல்லூரி, யா/வடஇந்து மகளிர் கல்லூரி, யா/மணற்காடு றோ.க.த.க.

**விவாதம்**

யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம், யா/ தொண்டைமானாறு வீ.ம.வித்தியாலயம், யா/சிதம்பராக் கல்லூரி.

**இசை குழு 1**

யா/ஹாட்லிக் கல்லூரி, யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலை, யா/விக்னேஸ்வராக் கல்லூரி.

(17) (தொடரும்...)

# வடமராட்சிக் கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமொன்று நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)





மல்லாவி மக்கள் வங்கிக் கிளையினால் 2012 ஆம் ஆண்டிற்கான ஜெயஸ்ரீ வெற்றியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும், புத்தாண்டு சிறப்பு நிகழ்வும் வங்கிக்கிளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது கிளை முகாமையாளர் எஸ்.சுரேஸ்குமார் உரையாற்றுவதையும் ஜெயஸ்ரீ வெற்றியாளருக்கு வர்த்தகர் பரிசில் வழங்குவதையும் காணலாம். (140)

கஷ்டப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடம் வாருங்கள் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

- இயேசுக்கிறிஸ்து.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நம்மிடையே புத்திஜீவிகள் உண்டா?

"தம்முடைய கலாசாரத்தின் சிறப்புகளையும், தம்முடைய வரலாற்றின் வெற்றிகளையும் பேசி ஆரவாரம் செய்வது அறிவுஜீவிகளின் வேலையாக இருக்க முடியாது" என்று குறிப்பிடுகிறார் பிரபல பலஸ்தீன அறிஞரான எட்வேர்ட் ஸெய்த். தேசியக் கருத்தியல்களில் ஊறி எளிமையான ஆத்திரங்களுக்கு எடுபட்டு, விமர்சன உணர்வை இழப்பதும் உணர்ச்சியடிப்படையிலான பொது நீரோட்டக் கருத்துகளுக்கு 'ஆமாம்' போடுவதும் அவர்தம் இயல்பல்ல என்கிறார் அவர்.

புத்திஜீவி என்பவன் தன்னை ஒரு இனத்தைச் சார்ந்தவனாக மட்டும் குறுக்கிக்கொண்டு சிந்திக்க மாட்டான். மக்களின் எதிர்காலச் செழிப்பிற்கு வேண்டியதைச் சொல்லும்போது, நிகழ்காலத்தில் அவர்களது எதிர்ப்பை அஞ்சி முனங்க மாட்டான்.

ஆண்ட பரம்பரைக் கதைகளையும், பண்டைய மேன்மைகளையும் சொல்லி நடப்புலகைக் காணவிடாது இன்றும் நம்மைக் கனவுலகத்தில் மிதக்க வைத்துக் கொண்டிருப்பவர்களால் சாமானிய வாழ்க்கை எப்படிக் கதிகலங்கிப் போகும் என்பதைப் பார்த்து விட்டோம்; பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நீதிக்கும் சமத்துவத்துக்கும் கௌரவத்துக்குமான போராட்டம் என்பது இன்றைய சிக்கல்களையும் யதார்த்த நிலைமைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டதாகவே வடிவமைக்கப்பட வேண்டும். வெறும் உணர்ச்சிவசப்பட்ட விருப்பங்களை விசிறியடித்தபடியே இந்த சிக்கல்களைக் கடந்துவிட முடியாது.

தேசபக்தி ஆவேசங்களை அள்ளி விசிறி, இன்று மக்களைக் கஷ்டப்பட வைத்துக் கொண்டிருப்பவர்களும், அவற்றுக்கெல்லாம் எதிர்காலத்துக்கான ஒரு 'விடுதலை நியாயத்'தைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களும், தாங்கள் மக்களை ஏமாற்றவில்லை என்பதில் மனசாட்சிக்கு உண்மையாக இருக்கிறோமா என்பதைத் திரும்பவும் ஒருமுறை கேட்டுப்பார்த்துக் கொள்ள வேண்டும். எந்த நம்பிக்கையில் மக்களைத் தொடர்ந்து கஷ்டப்பட வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தமக்குள்ளாகவேனும் பலமுறை விசாரித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

மக்களின் இன்றைய கஷ்டங்களை மாற்றும் எத்தனங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, 'அது நடக்காத அலுவல்' என்ற முடிந்த முடிவுக்குள் தள்ளிவிட்டு, புதிது புதிதாய் கஷ்டங்களைக் கண்டுபிடித்துப் பிரலாபம் வைத்துக் கொண்டிருப்பதையே அரசியலாய்ச் செய்துவருவது சரிதானா?

தங்களது ரோசத்திற்கும், எதிர்பார்ப்புகளுக்கும், வீம்புகளுக்கும் ஏற்ப மட்டுமே தீர்வு வரவேண்டும் என்று அழுத்தமான பிடிப்போடு இருப்பவர்கள், அந்த லட்சியம் தவிர வேறெதுவும் முக்கியமல்ல என்று நினைக்கின்றவர்கள் அடிப்படையில் சுயநலவாதிகள்தான். அவர்களிடம் எல்லையற்ற அகந்தையே நிறைந்து கிடக்கிறது. அதனாலேயே சாதாரண மக்களின் இயல்பு வாழ்வுக்கான சமரசங்களை செய்துகொள்ள மறுப்பவர்களாயிருக்கிறார்கள். இது தங்களது இலட்சியங்கள், வேட்கைகளுக்காக சாதாரண மக்களைக் கஷ்டப்பட வைக்கவும் பலிகொடுக்கவும் தயங்காத தீவிரவாதமாக மாறிவிடுகிறது.

இந்த நாட்டையும் மக்களையும் மேலும் பாழ்படுத்தாது, காப்பாற்றுவதிலும் முன்னேற்றுவதிலும் அக்கறை இருக்கக் கூடிய அனைத்துத் தரப்பினரும் இறங்கி, செயற்படும் தளத்தில் சந்தித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது.

எல்லோரும் இதுவரை சென்ற பாதைகளிலிருந்து திரும்பி வந்து, நம் அனைவரினதும் எதிர்காலத்திற்காக நாம் இணைந்து செல்ல வேண்டிய புதுப் பாதையைத் தெரிவு செய்துகொள்ள வேண்டிய வாய்ப்பை மீண்டுமொரு தரம் தவற விடுவதும் மீண்டும் மீண்டும் வருத்தப்படுவதுமாகத் தொடர வேண்டாம். பழைய முரண்களைப் பேசிப் பேசியும், பழைய ஆவேசங்களைக் கைவிடாமலும் பகைவெறுப்பை வளர்த்து போலி விடுதலை நம்பிக்கைகளை ஊட்ட வேண்டாம்.

சொல்லொணாப் பாடுகள் அனைத்தும் பட்டு, வாழ்விழந்து நொந்து அல்லலுறும் அப்பாவி மக்களின் பேரால் அவற்றை மறந்துவிடுவதற்கு ஒவ்வொருவரும் தயாராக வேண்டும்.

- ஆசிரியர்

# இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு குறித்து விசனம்

மன்னார், நானாட்டான் பிரதேச சபையின் அனுமதியின்றி புதிய அலுவலகமொன்றுக்கு கிரவல் மண் பரப்புவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டமையை தான் வன்மையாகக் கண்டிப்பதாக நானாட்டான் பிரதேச சபையின் உபதலைவர் மரியதாஸ் ரீகன் தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேச சபையின் புதிய அலுவலகமொன்றுக்கு கிரவல் மண் பரப்புவதற்காக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான விலை மனுக்கோரல் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட நிலையில் சபையின் அனுமதியின்றி குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நானாட்டான் பிரதேச சபையில் விலை மனுக்கோரல் சபை உள்ளது. குறித்த சபையில் பிரதேச சபையின் தலைவர், உப தலைவர், இரண்டு உறுப்பினர்கள், நானாட்டான் பிரதேச செயலக கணக்காளர், தொழில்நுட்ப உதவியாளர், பிரதேச சபையின் செயலாளர் என 7 பேர் கொண்ட நிர்வாக சபை உள்ளது.

எனினும் உபதலைவருக்கும் இரண்டு உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படாத நிலையில் பிரதேச சபையின் செயலாளர் இரகசியமாக குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதற்குப் பிரதேச சபையின் சக உறுப்பினர்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் கூறினார். நானாட்டான் பிரதேச சபையில் 5 ஆயிரம் ரூபாவிற்கு மேல் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுவதாக இருந்தால் சபையின் அனுமதியை பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் இவர்கள் 4 பேரும் தன்னிச்சையாக முடிவெடுத்து குறித்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர் எனவும் அவர் கூறினார். இதனை வன்மையாகக் கண்டிப்பதுடன், எதிர்வரும் 18ஆம் திகதி பிரதேச சபைக் கூட்டத்தில் இதற்கான உரிய பதிலை சமர்ப்பிக்குமாறு தாம் கோரியுள்ளதாக நானாட்டான் பிரதேச சபையின் உபதலைவர் மரியதாஸ் ரீகன் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண செயற்பாட்டில் அதிருப்தி கொள்ளும் அமீர்அலி

## அரசியலிலும் திடீர்மாற்றம் வருமாம்

கிழக்கு மாகாண சபையின் செயற்பாட்டில் நம்பிக்கை இழந்துவிட்டதாகவும், இதனால் அரசியலில் திடீர் மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் நிலவுவதாகவும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஓட்டமாவடி ஷரீப் அலி வித்தியாலயத்தில் இரு மாடிக் கட்டடத்திற்கான அடிக் கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு சின்னாபின்னப்பட்ட மக்களைக் கொண்ட பகுதியில் பல்வேறு எதிர்ப்புக்களுடன் உருவாக்கப்பட்ட கிழகக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் அனைத்தும் நம்பிக்கை இழந்துவிட்டது.

இந்தச் சபையினூடாக எந்த வித வேலைத்திட்டங்களும் நடைபெறுவதில்லை. நடக்கும் என்ற நம்பிக்கையும் இழந்து வருகின்றது. இதனால் கிழக்கு மாகாண அரசியலில் திடீர் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் நிலவுகின்றன.

கிழக்கு மாகாண சபையில் ஏற்படும் மாற்றம் தேசிய அரசியலையும் பாதிக்கலாம். இதற்கான முஸ்தீபுகள் அவசரமாக நடந்து வருவதை உணர முடிகின்றது.

நாங்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்து அரசியலில் களமிறங்கியவர்கள். அரசின் மீது நம்பிக்கை கொண்ட எம்மில் அரசு கவனம் செலுத்தியிருந்தால் கிழக்கு மாகாண சபையின் செயற்பாட்டில் எமகது நம்பிக்கை ஏற்பட்டிருக்கும்.

முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு மாகாண சபை ஊடாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள இனத்தைச் சேர்ந்த மூவின மக்களுக்கும் எந்தவிதமான பயனும் இல்லாத சூழ்நிலை காணப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபை ஊடாக எதுவுமே சாத்தியப்படாது என்ற நிலைமையே இன்று மேலோங்கி இருக்கின்றது. அதனால், கிழக்கு மாகாணத்தின் செயற்பாடுகள் இவ்வாறே தொடருமாக இருந்தால் மிக விரைவில் திடீர் அரசியல் மாற்றம் நிகழ்வது நிச்சயம் எனத் தெரிவித்தார்.

# வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட வட, கிழக்கு வாசிகளுக்கு ஐ.ஓ.எம்.உதவி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வுச் செயற்திட்டங்களை சர்வதேச புலம்பெயர்தலுக்கான அமைப்பு (ஐ.ஓ.எம்) மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு குறித்த நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் வி.வரதபரன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, குடும்பப் பொருளாதாரத்தை சீர்செய்ய வெளிநாடுகளுக்குச் சென்று திருப்பி அனுப்பப்பட்ட நிறையப் பேர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ளனர்.

இவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும்போது தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாமல் உளரீதியாக பாதிப்படைகின்றனர். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் பெருமளவில் இனங்காணப்பட்டுள்ளனர். இவ்ர்களில் அநேகர் இளைஞர்களாகவும், குடும்பஸ்தர்களாகவும் உள்ளனர். எனவே இவர்களுக்குக் கைகொடுக்கும் செயற்திட்டங்களை ஐ.ஓ.எம். நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. தற்போது இதற்கான செயற்திட்டங்கள், உள ஆலோசனைகள், பயிற்சிகள், தொழில் முயற்சிகளுக்கான கடன் உதவிகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும். தெரிவித்தார்.

# முத்திரையிடாத நிறுத்தற் கருவிகள்; 28 வர்த்தகர்கள் மீது வழக்கு

யாழ்ப்பாணத்தில் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளை பயன்படுத்தியதாகக் கூறப்படும் 28 வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட செயலகத்தின் நிறுத்தல் அளவைகள் முத்திரையிடுதல் அலுவலகத்தினால் கடந்த 8 ஆம் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளை பயன்படுத்தியதாகக் கூறப்படும் 28 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ். நகர், வேலணை, பருத்தித்துறை, சாவகச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றமை தெரிய வந்துள்ளது. அத்துடன், மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக் கடைகள், மீன் சந்தைகளிலும் நிறுத்தல் அளவைக் கருவிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை எனவும் அவர் கூறினார். மேலும் இந்தச் சோதனையின்போது வெதுப்பகங்களிலும் பாணின் நிறை குறைவாக அளக்கப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். (25)

# தமிழக மாணவர்கள் போராட்டத்தின் குறி

# இந்திய அரசே!

■ வானவில் 27 இதழ் தலையங்கத்திலிருந்து



**தமிழக மாணவர்களின் இப்போராட்டம் வெளிப்பார்வைக்கு முற்றுமுழுதாக இலங்கைக்கு எதிரானது எனத் தோன்றினாலும், அது பாதி உண்மைதான் மறுபாதி உண்மை, அது இந்திய அரசுக்கும் எதிரானது என்பதுதான். அதுமாத்திர மல்லாமல் வெகுவிரைவில் அது முற்றுமுழுதாக இந்திய அரசுக்கு எதிராக மாறும் என்பதும் இன்னொரு உண்மை. அதற்கான திட்டங்களின் அடிப்படையிலேயே இப்போராட்டம் வெளிநாட்டு சக்திகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது இந்தியா – இலங்கை என்ற இரண்டு நாடுகளையும் பொறுத்தவரை, இந்தியாதான் உலக ஆதிக்க சக்திகளின் பிரதான இலக்காகும் என்ற உண்மை உணரப்பட வேண்டும்.**

இந்தியாவின் தமிழக மாநிலத்தில் இலங்கை அரசுக்கு எதிராக அண்மையில் உருவாகியுள்ள மாணவர்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் ஒரு புதிய பரிமாணமாக அரசியல் நோக்கர்களால் நோக்கப்படுகிறது. இந்தப் போராட்டத்தை விரும்பியோ விரும்பாமலோ ஏறத்தாழ அனைத்து தமிழகக் கட்சிகளும் ஆதரிக்கின்றன. அது மாத்திரமல்லாமல் இந்தப் போராட்டங்கள் காரணமாக இந்திய மத்திய அரசாங்கமும் பெரும் இக்கட்டில் சிக்கியுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக திராவிட இயக்கங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை செலுத்தி வந்துள்ளன என்பது வரலாறு. அங்குள்ள எல்லாக் குழுக்களினதும் வாக்குவேட்டைக்கான முதலீடாகவும் மாறிவிட்டது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்து திராவிட இயக்கங்கள் நடாத்தும் அலங்காரத் திருவிழாக்களால் மருண்டுபோன தேசியக் கட்சிகளான காங்கிரஸ் கட்சி, இடதுசாரிக் கட்சிகள், பாரதிய ஜனதாக் கட்சி என்பனவும்கூட இப்பொழுது இந்த மலிவான விளையாட்டில் ஈடுபட ஆரம்பித்துள்ளன. இடையில் புலிகள் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததைத் தொடர்ந்து, மக்கள் எதிர்ப்புக்கு அஞ்சி சற்றுப் பின்வாங்கியிருந்த இந்த தமிழினப் பிழைப்புவாத சக்திகள், மீண்டும் தமிழக அரசியல் அரங்கின் மையப் பகுதிக்கு வந்து தமது கும்மாளத்தைத் தொடங்கியுள்ளன.

அந்த அக்கறை சகோதர இன உணர்வு அடிப்படையில் இருந்ததும் உண்மைதான். ஆனால், எப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவு ஏற்பட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற போட்டி அணி உருவானதோ, அன்று தொடக்கம் இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது, அந்த இரு அணிகளினதும் அரசியல் சதுரங்கப் போட்டியாகவும், இலங்கைத் தமிழர்கள் சதுரங்கக் காய்களாகவும் மாற்றப்பட்டுவிட்டனர். பின்னர் அங்கு மேலும், பல பிளவுகள் திராவிட இயக்க அணியில் ஏற்பட்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்தச் சூழ்நிலையில், இந்த தமிழக அரசியல் கட்சிகளின் நேரடித் தொடர்பு இல்லாத ஒரு தோற்றப்பாட்டுடன் தற்போதைய தமிழக மாணவர் போராட்டங்கள் தலையெடுத்துள்ளன.

அந்தப் போராட்டத்தின் விசாலமும், அது முன்வைத்திருக்கும் கோரிக்கைகளும் சற்றுப் பாரதூரமான சிந்தனைக்கு உரியவையாகும். அது தமிழக அரசியல் கட்சிகளின் வழமையான பாணியிலிருந்து சற்று வித்தியாசமான புதிய பரிமாணத்தில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

அதாவது, இந்த மாணவர் போராட்டங்கள் சுயாதீன மானவை என்றோ, சுதந்திர மானவை என்றோ ஒதுக்கிவிட முடியாத தன்மையைக் கொண்டுள்ளன.

“இலங்கையில் நடந்தது திட்டமிட்ட இனப்படுகொலை என்பதை இந்திய அரசாங்கம் ஏற்க வேண்டும், அதற்காக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் விசாரித்து தண்டனை வழங்க வேண்டும், இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், இலங்கையில் தமிழர்களுக்கு ஒரு தனிநாட்டை உருவாக்குவதற்காகத் தமிழர்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு நடாத்தும்படி ஐ.நா.வை இந்தியா வலியுறுத்தவேண்டும்” போன்ற கோரிக்கைகளை தமிழக மாணவ போராட்டக்காரர்கள் முன்வைத்துள்ளனர். இந்தக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை தமது போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை எனவும் அறிவித்துள்ளனர்.

அத்துடன், தமது போராட்டத்தைப் புலிகளின் வழியில் தொடரப் போவதாகவும் எச்சரிக்கை வேறு விடுத்துள்ளனர். அதுமாத்திரமல்ல, ஏறக்குறைய அவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் முதல்வர் ஜெயலலிதாவின் தமிழக அரசாங்கம் சட்டசபையில் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளது.

உண்மையில் மாணவர்களின் இந்த விபரீதமான கோரிக்கைகளும், அவர்கள் புலிகள் வழியில் போராடப் போவதாக விடுத்துள்ள எச்சரிக்கையும், இலங்கை அரசுக்கானது என்பதைவிட, இந்திய அரசுக்கானது என்பதுதான் உண்மையான நிலவரமாகும். இந்திய மத்திய அரசு இலங்கையில் என்ன செய்ய நினைத்ததோ, அதைத் தலைகீழாக தமிழக மாணவர்கள் மாற்றி அமைத்துள்ளனர்.

இந்திய அரசுக்கெதிராகச் செயல்பட்ட, அந்த நாட்டின் தலைவரான ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்த புலிகளை முற்றுமுழுதாக அழித்துவிட வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சி அரசு முனைப்புடன் செயல்பட்டது. இலங்கையுடன் பல்வேறு பிரச்சினைகளில் (இலங்கையின் சீன ஆதரவு நிலை போன்ற) இந்திய அரசுக்கு கருத்து முரண்பாடுகள் இருந்த போதிலும், புலிகளை வேரோடு அழிக்கும் இலங்கை அரசின் முயற்சியில் இந்தியா தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கியது. புலிகளைக் காப்பாற்ற முன்வந்த மேற்கத்தைய சக்திகளையும் இந்தியா தடுத்து நிறுத்தி, இலங்கை அரசுக்கு வியூகம் வகுத்துக் கொடுத்தது. அதன் மூலம் புலிகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டனர். அத்துடன், ஒரு பெரும் தலைவலி முடிந்தது என இலங்கை - இந்திய அரசுகள் எண்ணியிருந்தன.

ஆனால், புலிகளின் ஆதரவாளர்களாகவும், பாதுகாவலர்களாகவும் திகழ்ந்த வெளிநாட்டுச் சக்திகளால் இதைச் சீரணிக்கவோ, பொறுத்துக் கொள்ளவோ முடியவில்லை. அவர்கள் இறுதி யுத்த காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள் என்று சொல்லி இலங்கை அரசுக்கெதிராக அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதுடன், ஜெனிவாவில் செயற்படும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக கடந்த வருடமும், இவ்வருடமும் இரு கண்டனப் பிரேரணைகளையும் முன்வைத்தன. அதன் மூலம் இலங்கையை மட்டும் அல்லாது, இறுதி யுத்த நேரத்தில் இலங்கைக்கு உதவிய இந்தியாவையும் குற்றஞ்சாட்டுவதுதான் அவர்களது உண்மையான அந்தரங்கத் திட்டம்.

புலிகளின் அழிவால் கையறு நிலையிலும் விரக்தியிலும் இருந்த புலம்பெயர் புலி ஆதரவாளர்களையும் தமது நோக்கத்தில் இந்தச் சக்திகள் ஒன்றிணைக்கத் தவறவில்லை.

அதுமட்டுமல்லாமல், இந்தக் குற்றச்சாட்டிலிருந்து இந்திய அரசு தப்பிவிட முடியாதபடி, இந்த வெளிநாட்டுச்சக்திகள் தமிழ்நாட்டிலுள்ள தமது ஆதரவு சக்திகள் மூலம் இந்திய மத்திய அரசுக்கு நெருக்கடிகளையும் உருவாக்கத் தொடங்கின. அவர்கள் ஒரு பக்கத்தில் இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்குத் துரோகமிழைத்ததாகக் குற்றஞ்சாட்டிக் கொண்டு, மறுபக்கத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் விரிசலை உண்டுபண்ணின. அதன் மூலம் ஒரேகல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்துவதில் அவை வெற்றி கண்டன.

மறுபக்கத்தில், இந்த மேற்கத்தைய சக்திகள் இலங்கையில் முடிவுக்கு வந்துவிட்ட புலிகளின் போராட்டத்தை தமிழக மாணவர்களின் வடிவில் உசுப்பிவிட்டுள்ளன. பொதுவாக மாணவர்கள் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள். அவர்களை ஒருமுறை உசுப்பி விட்டுவிட்டால், பின்னர் விடயங்கள் யாராலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் தறிகெட்டுச் செல்ல ஆரம்பிக்கும். இலங்கைத் தமிழர் போராட்டத்திலும் முதலில் மாணவர்களே உசுப்பி விடப்பட்டனர் என்பதை நினைவுகூரலாம்.

இப்பொழுது தமிழக மாணவர்களின் போராட்டம் தமிழக அரசாலோ, இந்திய மத்திய அரசாலோ கட்டுப்படுத்த முடியாத நிலையை அடைந்துள்ளது. முட்ட வரும் வெறிகொண்ட காளை மாட்டைக் கண்டு மிரண்டோடுபவர்கள் போல, தமிழக மாணவர்களின் போராட்டத்தைக்கண்டு, அனைத்து தமிழகக் கட்சிகளும் ஓடிக் கொண்டிருக்கின்றன. தமிழக காங்கிரஸ் கட்சியும் இதில் அடக்கம்.

இந்தியா தனக்கு எதிராக தமிழ்நாட்டில் எழுந்துள்ள எதிர்ப்பு நிலையைத் திசை திருப்பவும், அமெரிக்காவுடன் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உறவைப் பாதுகாக்கவும், கடந்த வருடமும் இந்த வருடமும் அமெரிக்கா ஜெனிவாவில் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது. இருந்தும் அதனால் தமிழகத்தில் மத்திய அரசுக்கு ஆதரவாக எவ்விதமான சாதகமான நிலையும் ஏற்படவில்லை. மாறாக இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்புணர்வு முன்னொருபோதும் இல்லாத வகையில் உருவானது தான் அதன் மிச்சம்.

தமிழக மாணவர்களின் இப்போராட்டம் வெளிப்பார்வைக்கு முற்றுமுழுதாக இலங்கைக்கு எதிரானது எனத் தோன்றினாலும், அது பாதி உண்மைதான் மறுபாதி உண்மை, அது இந்திய அரசுக்கும் எதிரானது என்பதுதான். அதுமாத்திரமல்லாமல் வெகுவிரைவில் அது முற்றுமுழுதாக இந்திய அரசுக்கு எதிராக மாறும் என்பதும் இன்னொரு உண்மை. அதற்கான திட்டங்களின் அடிப்படையிலேயே இப்போராட்டம் வெளிநாட்டுச் சக்திகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது.


ஆசியாவில் இந்த வெளிநாட்டு சக்திகளின் நீண்டகால நோக்கம், சீனாவை மடக்குவதும், இந்தியாவை இன அடிப்படையில் பிளவுபடுத்திப் பலவீனப்படுத்துவதும் ஆகும். அங்கு காங்கிரஸ் அரசு போய், வலதுசாரி பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தாலும், இந்தியாவை உடைத்துப் பலவீனப்படுத்துவது என்ற உலக ஆதிக்க சக்திகளின் நோக்கம் மாறப்போவதில்லை. இந்த உண்மையை தற்போதைய இந்திய அரசு உணர்ந்து கொள்வது அவசியமானது.

அதாவது இந்தியா - இலங்கை என்ற இரண்டு நாடுகளையும் பொறுத்தவரை, இந்தியாதான் உலக ஆதிக்க சக்திகளின் பிரதான இலக்காகும் என்ற உண்மை உணரப்பட வேண்டும். ●

# தமிழகத்தில் இடம்பெறும் போராட்டம்

# பின்னணியில் அமெரிக்க சி.ஐ.ஏ

## கூறுகிறார் குணதாச அமரசேகர



(கொழும்பு)

தமிழகத்தில் இடம்பெற்று வரும் இலங்கைக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவுப் பிரிவு செயற்பட்டு வருவதாகத் தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழகத்துடன் அமெரிக்காவிற்கு பிரத்தியேக உறவுகள் காணப்படுகின்றன. அண்மையில் முன்னாள் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன், ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசியிருந்தார். தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக நடாத்தப்பட்டு வரும் போராட்டங்கள் சாதாரண மக்களினால் முன்னெடுக்கப்படவில்லை.

இலங்கையில் பிளவினை ஏற்படுத்தும் நோக்கில் மிகவும் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் சூழ்ச்சித் திட்டமாக இதனைக் கருத வேண்டும்.

ஜெயலலிதா சிறந்த நடிகை என்ற போதிலும் புத்தியுடையவரல்ல. இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டவும், தமிழகத்தில் சாதாரண மக்களின் இன உணர்வுகளைத் தூண்டவும் சிலர் முயற்சிக்கின்றனர்.

சீன - இந்திய எழுச்சி காரணமாக அமெரிக்கா வலுவிழந்து செல்கின்றது. எனவே ஆசிய பிராந்திய வலயத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதனை அமெரிக்கா விரும்புகின்றது. தமிழகத்தில் தனி ஈழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு குழப்பங்கள் விளைவித்தால் அது அமெரிக்காவிற்கு சாதகமாகவே அமையும் என குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

# சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு விரைவில் நவீன ஆயுதங்கள்

(கொழும்பு)

வெகு விரைவில் அதி நவீன ரக ஆயுதங்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து இவ்வாறு நவீன ரக ஆயுதங்களை வழங்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது.

கண்ணீர்ப் புகைக் குண்டு போன்ற பல்வேறு ஆயுதங்களை பயன்படுத்தி கலகங்களை தடுக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெலிக்கடையில் இடம்பெற்ற கலகத்தின் போது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ரி - 56 ரக ஆயுதங்களைப் பயன்படுத்தியிருந்தனர். இதனால் பாரியளவு உயிர்ச் சேதம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இவ்வாறான கலக நிலைமைகளின் போது சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு நவீன ரக ஆயுதங்கள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்காவின் தாளத்திற்கு ஆடவேண்டிய அவசியமில்லை

## – சட்டத்தரணி கொமின் தயாசிறி

(கொழும்பு)

அமெரிக்காவின் தாளத்திற்கு ஆட வேண்டிய அவசியம் கிடையாது என சிரேஷ்ட சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து அமெரிக்கத் தூதுவர் மிச்சல் ஜே சிசன் வெளியிட்ட கருத்துக்களுக்குப் பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கும், நாட்டு மக்களுககும் மிகவும் பொருத்தமானது எதுவோ அதனை அமுல்ப்படுத்தவே அரசாங்கம் முனைப்புக் காட்ட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டுக்கு நன்மை ஏற்படக் கூடிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்ப்படுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த கட்டமாக இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவை



விடவும் இந்தியா தலையீடு செய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவளித்த நாடுகளின் ஒத்துழைப்பைத் தக்க வைத்துக் கொள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்ப்படுத்த வேண்டியது அவசியமானது என கொமின் தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

# ஜயசேகர எம்.பி.யின் குற்றச்சாட்டு பொய் என்கிறார் கருணாரத்ன

(கொழும்பு)

மஹரகமை புற்றுநோய் வைத்தியசாலையில் ஐ.தே.க. எம்.பி. தயாசிறி ஜயசேகர கூறியதைப் போல எவ்வித மருந்துத்தட்டுப்பாடுகளும் இல்லையென அதன் பணிப்பாளர் வைத்தியர் கனிஷ்க கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் 17 வெவ்வேறு வகை மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அமைச்சர் ஜயசேகர அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இக்குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்துள்ள பணிப்பாளர் கனிஷ்க கருணாரத்ன குறிப்பிட்ட சில மருந்துகளுக்கு மட்டுமே தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்துள்ளார்.

சுமார் 8 வகையான மருந்துகளுக்கு மட்டுமே தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தனது குற்றச்சாட்டு பொய் என நிரூபிக்கப்படும் பட்சத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய தயாராகவுள்ளதாக தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





தங்காலையில் உள்ள தனது மூதாதையரின் இல்லத்தில் குடும்பத்தினருடன் புதுவருடத்தை ஜனாதிபதி கொண்டாடிய வேளை, நாட்டின் முதற்பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ பொங்கல் பொங்குவதனையும், தங்காலையிலுள்ள மக்கள் வங்கிக்குச் சென்ற ஜனாதிபதி சுபநேரத்தில் பணப்பரிமாற்றத்தில் ஈடுபடுவதனையும் காணலாம்.

# மிரிஹான முகாமிலிருந்து 10 வெளிநாட்டவர் தப்பினர்

(கொழும்பு)

மிரிஹானை குடிவரவுத் துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 10 வெளிநாட்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குடிவரவுத்துறை பணிப்பாளர் சூலானந்தா பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

குடிவரவு சட்டங்களை பல்வேறு வழிகளில் மீறிய குற்றத்துக்காக 100 இற்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும், அவர்களை குடிவரவுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிடுவதில்லை.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு அங்குள்ள சில பொலிஸார் வெளிநாட்டவர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு அவர்களை வெளியேற அனுமதிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் கடந்த சில நாட்களில் இவ்வாறு 10 வெளிநாட்டவர்கள் முகாம்களில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்களில் நான்கு பாகிஸ்தானியர்களும் உள்ளடங்குகின்றனர்.

குறிப்பாக, பாகிஸ்தான் அரசாங்கத்தினால் தேடப்பட்டு வருகின்ற பாகிஸ்தானிய பெண் ஊடகவியலாளர் ஒருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மும்மொழி பெயர்ப்பலகை பேருந்துகளில் விரைவில்

(கொழும்பு)

பேருந்துகளில் மும்மொழிப் பெயர்ப் பலகை விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தேசிய மொழிக் கொள்கைகளுக்கு அமைய மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகளை காட்சிப்படுத்த வேண்டியது அவசியமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகளை காட்சிப்படுத்துமாறு போக்குவரத் அமைச்சு மற்றும் போக்குவரத்து அதிகார சபையிடம் ஏற்கனவே கோரப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகளை காட்சிப்படுத்தாத பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு, தேசிய மொழிகள் அமைச்சு பொலிஸாரிடம் கோரியுள்ளது.

# ஊழல் மோசடிகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக விசாரணை செய்யப்படாத குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடாத்தப்படவுள்ளது. பொலிஸ்மா அதிபர் என்.கே.இளங்கக்கோனின் பணிப்புரைக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் அடங்கிய ஆவணங்கள் ஏற்கனவே விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பலருக்கெதிராக இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு எதிரான 100 இற்கும் மேற்பட்ட ஊழல் மோசடி முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# வவுனியாவில் அடிப்படை வசதிகளற்ற பயனாளிகளுக்கு வாழ்வாதாரக் கடனுதவி

(வவுனியா)

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் அடிப்படை வசதிகளற்ற பயனாளிகளுக்கு 208.1 மில்லியன் ரூபா வாழ்வாதாரக் கடன் உதவியாக வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வவுனியா மாவட்ட மீளெழுச்சித் திட்டத்தின் சமூக ஒருங்கிணைப்பாளர் எஸ்.சந்திரகுமார் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான வேலைத்திட்டம் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கும் போதே இதனைக் கூறினார்.

இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள பயனாளிகள் 8,164 பேருக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் ஊடாக இந்தக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் 98 கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நன்னீர் மீன்வளர்ப்பு, தேனி வளர்ப்பு, ஆடை தைத்தல், விவசாயம், காளான் வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழிவளர்ப்பு உட்பட பல தொழில் முயற்சிகளுக்காகவே இந்தக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் உதவி மூலம் பயனடைபவர்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன், தமது கடனை மீளச் செலுத்தி அந்நிதியை சுழற்சி முறையில் ஏனையவர்களுக்கு வழங்குவதற்குமான நடைமுறையும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறினார். (160)

# கட்டாக்காலி மாடுகளின் தொல்லை முல்லைத்தீவில் அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, கரைத்துரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை தொடர்ந்தும் அதிகரித்துள்ளதால் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டசெயலகத்துக்கு முன்பாக, நீதிமன்றத்துக்கு முன்பாக, சந்தை கட்டடங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் ஆகியவற்றில் கூட்டம் கூட்டமாக நிற்கும் மாடுகளால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுவதுடன் விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலையும் காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பாடசாலைகளின் முன்பாக சந்தைக் கட்டடங்களில் இரவு வேளைகளில் மாடுகள் படுத்துறங்கி விட்டு காலையில் இடத்தை அசுததமாக்கி விட்டு செல்வதால் பாடசாலையை மாணவர்களும் சந்தை வியாபாரிகளும் துப்புரவு செய்த பின்னரே செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது.

யுத்த இடம் பெற்று 3 1/2 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் கவனிப்பாரற்று கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்துமாறு ப்ல முறை தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் மக்கள் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்க கட்டாக்காலி மாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# மட்டுவில் மத்தி வைரவர் ஆலய மகாகும்பாபிஷேக பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி - சாவகச்சேரி மட்டுவில் மத்தி அருள்மிகு ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.45 மணி முதல் 8.45 மணிவரையுள்ள சுப வேளையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 24ஆம் திகதி புதன்கிழமை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும், 25ஆம் திகதி காலை விநாயகர் வழிபாடு, தீபாராதனை. வேததோத்திர ஆசிர்வாத திராவிடபாராயணம் உள்ளிட்ட கிரியைகள் இடம்பெற மகா கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகளை தேவஸ்தான குரு பாலகுருமணி சிவஸ்ரீ இ.பரமேஸ்வரக் குருக்கள் ஆற்றவுள்ளார்.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று 16 ஆம் நாளாகிய மே மாதம் 10 ஆம் திகதி 108 சங்காபிஷேகமும் மாலை 4 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் இடம்பெற்று வைரவப் பெருமான் முத்துச் சப்பறத்தில் உள்வீதி, வெளி வீதி உலாவரும் காட்சியும் இடம் பெறவுள்ளது. (43,இ)

# க.பொ.த.(சா/த) பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,

இ.லாவண்யா 9ஏ, இ.லக்ஷி 8ஏ, பி, ச.சிந்துஜா 8ஏ, சி, க.கயூரன் 7ஏ, பி, சி, கு.மனோஜா 7ஏ, பி, சி, ர.மதன்ராஜ் 7ஏ, 2சி, ச.இசையரசி 6ஏ, பி, 2சி,

பூ.கோகிலாத் 4ஏ, 3பி, 2சி, கு.காயத்தரி 3ஏ, 3பி, 2சி, எஸ், இ.சோபிஷா 3ஏ, 3பி, சி, 2எஸ், அ.விஜிதா 3ஏ, 3சி, 3எஸ்.

# இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை பண்ணப்படும் விவசாய நிலங்களில் விவசாயிகள் முன்கூட்டியே நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற் பயிர்ச்செய்கைக்கு இரணை மடுக்குளத்தில் இருந்து நீரைப்பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தமை காரணமாகவே விவசாயிகள் இவ்வாறு முன் கூட்டியே விதைப்பில் ஈடுபட்டிருப்பதாக தெரியவருகின்றது.

அத்துடன் கடந்த ஆண்டு போன்று கோடைகாலத்தில் இரணைமடுக்குளத்தில் நீர் வற்றிவிடும் நிலை ஏற்படும் என்பதன் காரணமாகவும் விவசாயிகள் இவ்வாறு பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்நிலையில், தற்போது இரணைமடுக்குளத்தின் கீழ் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் நெல் நல்ல முறையில் பயிராகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், தற்சமயம் வன்னியில் பெய்துவரும் மழை இந்தச் சிறுபோக நெற்பயிர்ச்செய்கைக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியிருப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (பா)

# அலங்கார உற்சவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 10ஆம் திகதி நவசக்தி அர்ச்சனையும், 11ஆம் திகதி மாலை 5 மணிக்கு திருவிளக்குப் பூசையும், 12ஆம் திகதி 1008 வில்வ அர்ச்சனையும், 13ஆம் திகதி திங்கட்கிழமை 1008 சங்காபிஷேகமும் மணவாளக்கோல விழாவும் இடம் பெறவுள்ளதுடன், 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைரவ சாந்தியுடன் பூசைகள் நிறைவு பெறவுள்ளன. (109)

# முரசின் இன்றைய பலன்

(16.04.2013 - செவ்வாய்க்கிழமை)

விஜய வருடம் சித்திரை மாதம் 03 ஆம் திகதி.
நட்சத்திரம் மிருகசீரிடம் சித்தம் காலை 8.32 வரை. திதி ஷஷ்டி
பின்னிரவு 01.05 வரை. இராகுகாலம் 03.04 - 0434 வரை.
சுபநேரம் 10.34 - 12.04 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** உங்கள் வெளித் தொடர்புகள் பெருமை தேடித்தரும். நண்பருக்கு உதவுவீர்கள். தொழில், கணிசமான வளர்ச்சி உருவாகும். பணவரவு முன்னேற்றம் பெறும். உத்தியோகத்தர் பாராட்டு, வெகுமதி பெறுவர். புத்திரர் உயர்வு, குடும்பம் மகிழ்வு.

**ரிஷபம்** உங்கள் நீண்டகால கொள்கைப்பிடிப்புக்கு, சிறந்த பலன் கிடைக்கும். பண்பு, பணிவுடன் நடந்து பாராட்டுப் பெறுவீர்கள். தொழில், மூலதனத்திற்கான பணவசதி வந்து சேரும். வீட்டை அழகுபடுத்துவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு சலுகை.

**மிதுனம்** நண்பரின் செயலில் குறை காண வேண்டாம். தொழிலில் அளவான மூலதனம் போதும். கடும் உழைப்பினால் வரவு சீராகும். விலைமதிப்புள்ள பொருட்களை கவனமுடன் பயன்படுத்தவும். குடும்ப சச்சரவு நீங்கும். புத்திரர் செய்தியால் மனநிறைவு.

**கடகம்** சிலரது புகழ் வார்த்தையால் மனம் மயங்கலாம். வாழ்வில் சறுக்கலை ஏற்படுத்தும். கவனம் தேவை. புதிய முயற்சிகள் இன்று தொடங்க வேண்டாம். தொழில், பழைய வேலைகளை முடிப்பது நல்லது. சராசரி பணவரவு. உணவில் கவனம்.

**சிம்மம்** சொந்த நலன் தியாகம் செய்து உதவுவீர்கள். வாழ்வில் உயர, புதிய வழி பிறக்கும். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். எதிர்பார்த்த பணவரவு. பழைய சிக்கல்கள் சுமுகமாகும். அரசால் ஆதாயம். இரக்க குணத்தால் மரியாதை.

**கன்னி** முக்கிய வேலை நிறைவேற தாமதம் ஏற்படலாம். நலம் விரும்புவோர் ஆலோசனையால் நிலைமையை சரி செய்வீர்கள். தொழில், நடைமுறை சீராகும். வரவைவிட செலவு கூடும். அலைச்சல் இருக்கும். குடும்ப ஒற்றுமை முக்கிய தேவையாகும்.

**துலாம்** செயல்களில், பொறுமை குணம் நிறைந்திருக்கும். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில், செழித்து, வாழ்வில் புதிய நம்பிக்கை. ஆதாய பணவரவு. வீடு, வாகனத்தில் அபிவிருத்தி மாற்றம். எதிர்காலத்திற்கு புதுவழி தெரியும்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் அதிக எதிர்பார்ப்புக் கொள்வர். அவர்கள் விரும்பியதை செய்து, ஒற்றுமை காப்பது நல் லது. தொழில் அதிக கவனம் கொள்வதால் சீராகும். சேமிப்பு செலவுக்கு ஆகும். நிதானமுடன் நடந்து சோதனைகள் தாண்டுவீர்கள்.

**தனுசு** சம்பந்தமில்லா விஷயங்களில் ஈடுபட்டு வீண்வம்பும் கோபமும் வரலாம். இடமறிந்து விலகுதல் நல்லது. தொழில், வரும் அனுகூலத்தைப் பாதுகாப்பது நலம். பணவரவு சராசரி. தாயின் தேவை நிறைவேற்றுவீர்கள். சிக்கலில் மீள நண்பர் ஆதரவு.

**மகரம்** மனம் தெளிவாக இருக்கும். அயலவருடன் அதிக அன்பு பாராட்டுவீர்கள். தொழில், அபரிமிதமான வளர்ச்சி. அதிக பணவரவு. சேமிப்பீர்கள். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகள் மூலம் நல்ல செய்தி. வீட்டில் நிம்மதி.

**கும்பம்** உங்கள் முன்னேற்றம் கண்டு, சிலர் பொறாமை காட்டுவர். பகை அறிந்து விலகுவது நல்லது. தொழிலில் நேரம் தவறாமை நன்மை தரும். குடும்பத்துக்கான பணத்தேவை கூடும். பயணத் திட்டம் ஒத்திவைப்பு. புத்திரரின் நற்செயல் மகிழ்விக்கும்.

**மீனம்** முன்பு இடையூறு ஏற்படுத்தியவரையும் நேசிப்பீர்கள். சிரம சூழ்நிலையையும் நன்மை ஆக்குவீர்கள். தொழில், வளர்ச்சி அதிகரிக்கும். உபரி வருமானம். வீட்டு உபயோகப்பொருள் வாங்குவீர்கள். உங்கள் வெற்றிக்கு வித்திடும் செய்தி வரும்.

## பார்சிலோனா வெற்றி



ரியல் ஷரகோசா அணிக்கு எதிரான லா லிகா கால்பந்துப் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்துத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் ரியல் ஷரகோசா, பார்சிலோனா அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் பார்சிலோனா அணிக்கு தியாகோ (20ஆவது நிமிடம்), கிறிஸ்டியன் டெலோ (39ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர். இதற்கு ரியல் ஷரகோசா அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.

பின் இரண்டாவது பாதியிலும் அசத்திய பார்சிலோனா அணிக்கு கிறிஸ்டியன் டெலோ (53ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். ஷரகோசா அணி வீரர்களின் கோல் முயற்சி எதுவும் பலிக்கவில்லை. முடிவில், பார்சிலோனா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## வின்சி வசம் பரிபாஸ் கிண்ணம்



(கடோவொய்ஸ்)

பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் இத்தாலியின் ரோபர்டா வின்சி சம்பியன் பட்டம் வென்றார்.

போலந்து நாட்டில் உள்ள கடோவொய்ஸ் நகரில் பெண்களுக்கான பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இத்தாலியின் ரோபர்டா வின்சி, செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவாவை சந்தித்தார்.

டைபிரேக்கர் வரை சென்ற முதல் செட்டை வின்சி, 7-6 என வென்றார். தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய வின்சி இரண்டாவது செட்டையும் 6-1 என மிகச்சுலபமாக வென்றார். முடிவில், இத்தாலியின் ரோபர்டா வின்சி 7-6, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

இதேவேளை, இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் லாரா, லினோ ஜோடி, ருமேனியாவின் ரால்கா, ரஷ்யாவின் வலேரியா ஜோடியை 6-4, 7-5 என்ற நேர் செட்களில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

## மோர்கனின் அதிரடி வெற்றிக்கு காரணம்

சன் ரைசர்ஸ் அணியை நாம் வெற்றிகொள்வதற்கு இயன் மோர்கனின் ஆட்டமே திருப்பு முனையாக இருந்தது என கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக் கப்டன் கம்பீர் தெரிவித்துள்ளார். ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு ஏற்ற வகையில் இருந்தது. 160 ஓட்டங்கள் வரை தான் எடுப்போம் என்று நினைத்தேன். ஆனால், மோர்கன் அதிரடியாக விளையாடியதை நான் எதிர்பார்க்கவில்லை. அவரது ஆட்டம் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அவரது அதிரடியான ஆட்டத்தால் தான் 20 ஓட்டங்களுக்கு மேல் கூடுதலாகக் கிடைத்தது. அவர் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர். இன்னும் வாய்ப்புக் கொடுத்தால் அவர் தனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார். அவரது ஆட்டத்தை நான் பாராட்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்ச்சையால் எச்சரிக்கை



(புதுடில்லி)

ஹர்பஜனுக்கு எதிரான பழைய சம்பவத்தை டுவிட்டரில் வெளியிட்டு மீண்டும் சர்ச்சை கிளப்பிய ஸ்ரீசாந்த்தை, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) எச்சரித்துள்ளது.

கடந்த 2008இல், நடந்த முதலாவது ஐ.பி.எல்., தொடரில், மொகாலியில் நடந்த லீக் போட்டியில் பஞ்சாப் அணி, மும்பை அணியை வீழ்த்தியது. இப்போட்டி முடிந்ததும் வீரர்கள் கைகொடுக்கும் போது, பஞ்சாப் வீரர் ஸ்ரீசாந்த் ஏதோ கூற, தோல்வியடைந்த விரக்தியில் இருந்த மும்பை வீரர் ஹர்பஜன் சிங், அவரது கன்னத்தில் ஓங்கி அறைந்தார். இப்பிரச்சினையில் மீதம் இருந்த போட்டிகளில் விளையாட ஹர்பஜனுக்குத் தடை விதிக்கப்பட்டது.

தற்போது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடி வரும் ஸ்ரீசாந்த், ஐந்து ஆண்டுகள் கழித்து, பழைய சம்பவம் குறித்து தனது டுவிட்டர் இணையத் தளம் மூலம் ஹர்பஜன் என்னை அறையவில்லை, திட்டமிட்டு என் மீது முழங்கையினால் பலமாக குத்தினார். அப்போது எடுக்கப்பட்ட வீடியோவைப் பார்த்தால், ஹர்பஜன் என்ன செய்தார் என்பதை தெளிவாக காணலாம் என செய்தி வெளியிட்டிருந்தார். இதனால் மீண்டும் சர்ச்சை கிளம்பியது.

இதனையடுத்து பழைய சம்பவங்களை சமூக வலைத்தளம் மூலம் வெளியிடக்கூடாது என பி.சி.சி.ஐ., ஸ்ரீசாந்தை எச்சரித்துள்ளது. இதுபோல மீண்டும் சர்ச்சைக்குரிய செய்திகளை வெளியிடும் பட்சத்தில், ஸ்ரீசாந்த் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என பி.சி.சி.ஐ., எச்சரித்துள்ளது.

இதேபோல தற்போது நடக்கும் ஆறாவது ஐ.பி.எல்., தொடரில் பெங்களூர், கொல்கத்தா அணிகள் மோதிய லீக் போட்டியின் போது ஹோலி, கம்பீர் மோதலில் ஈடுபட்டனர். இவர்களை முதலில் நடுவர்கள் ஒழுங்காக நடந்து கொள்ளும்படி கண்டித்தனர். தற்போது மைதானத்தில் மோதலில் ஈடுபட்ட இவர்களையும் பி.சி.சி.ஐ., அபராதம் விதிக்காமல் எச்சரிக்கை செய்துள்ளது.

## துணைத் தலைவராக




(புதுடில்லி)

இந்திய ரென்னிஸ் சங்கத்தின் துணைத் தலைவராக முன்னணி வீராங்கனை சானியா மிர்சா நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமீபத்தில் இந்திய ரென்னிஸ் வீரர்கள் சங்கம் தொடங்கப்பட்டது. இதன் தலைவராக ஜெய்தீப் முகர்ஜியும், செயலாளராக கார்த்திக் ப. சிதம்பரமும் உள்ளனர். துணைத் தலைவர்களாக லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி, சோம்தேவ் தேவ்வர்மன் ஆகியோர் இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில், புதிய துணைத் தலைவராக இந்தியாவின் முன்னணி வீராங்கனை சானியா மிர்சா நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு அவரும் சம்மதம் தெரிவித்து விட்டதாக டுவிட்டரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.பி.எல். போட்டிகளில் சூதாட்டமும் தாராளம்




(அகமதாபாத்)

கோடிக்கணக்கில் பணம் புரளும் ஐ.பி.எல். ருவென்ரி- 20 கிரிக்கெட் போட்டி இரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. பொழுது போக்கான இந்த விளையாட்டுக்கு இரசிகர்கள் அதிக அளவில் ஆதரவு கொடுப்பதால் இந்தப்போட்டி மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் ஐ.பி.எல். போட்டிக்கான வருவாய் உயர்ந்த நிலையில் உள்ளது.

விளம்பரம் உட்பட பல்வேறு வகைகளில் பணம் கொட்டுகிறது. இதேபோல இந்தப் போட்டியை மையமாக வைத்து மிகப்பெரிய அளவில் பந்தயங்களும் நடத்தப்படுகிறது. எந்த அணி வெற்றி பெறும், அணியில் இடம் பெறும் வீரர்கள் யார்?, நாணயச் சுழற்சியில் வெல்லும் அணி எது, முதலில் துடுப்பாடும் அணி எது் உட்பட பல வகைகளில் பந்தயம் கட்டப்படுகிறது.

தற்போது நடைபெற்று வரும் 6ஆவது ஐ.பி.எல். போட்டியில் ரூ.40 ஆயிரம் கோடிக்கு பந்தயம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் நடந்த பந்தயத்தை விட தற்போது 25 சதவீதம் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. குஜராத் தேர்தலில் 5 ஆயிரம் கோடிக்கு பந்தயம் நடத்தப்படுகிறது. அதைவிட 8 மடங்கு அதிகமாக இந்த ஐ.பி.எல். போட்டியில் பந்தயம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வைட் கொலர்கள் அதிக அளவில் இதில் நுழைந்துள்ளதால் பந்தயம் அதிகரித்துள்ளது. குறைந்த பட்சதொகையாக ரூ.1000 கட்டினால் ரூ.2 ஆயிரம் கிடைக்கும். முதலாவது ஐ.பி.எல். போட்டியில் ரூ.6 ஆயிரம் கோடிக்கு சூதாட்டம் நடத்தப்பட்டது. சூதாட்டத்தரகர்களின் தலைமையிடமாக ஹைதராபாத் இருப்பதாகக் கூறப்படுகிறது.

அனைத்து மெட்ரோ நகரங்கள் மற்றும் குஜராத்,ராஜஸ்தானில் மிகப்பெரிய அளவில் ஐ.பி.எல். பந்தயங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்நாள் அன்றுபோல் இல்லையே

(சிட்னி)

சச்சின் டெண்டுல்கரால் முன்புபோல் ஆட முடியாது இருந்தாலும் ஓய்வு பெறுவது குறித்த முடிவை அவரே எடுக்கவேண்டும் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவோ தெரிவித்துள்ளார்.

சச்சின் தற்போது விளையாடுகிறார், ஆனால், அது முன்பு விளையாடியது போல் இல்லை. ஓய்வு குறித்து அவர்தான் முடிவெடுக்கவேண்டும்.

டெஸ்ட் கிரிக்கெட்தான் தரத்தையும் திறனையும் பராமரிக்கும் ஒரே ஆட்டம். மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஆட்டங்களைக் கொண்டு டெஸ்ட் கிரிக்கெட்டை பதிலீடு செய்ய முடியாது.

அவுஸ்ரேலிய அணி இந்தியாவில் அடைந்த தோல்விகளுக்கு பயிற்சியாளரை குறை கூறக்கூடாது. அவுஸ்ரேலிய அணியின் இத்தகைய நிலை தற்காலிகமானதே. மீண்டும் எழுச்சியுறும் தன்மை கொண்ட அணிகளில் முதன்மையான அணி அவுஸ்ரேலியா என்பதை எவரும் புறந்தள்ளிவிட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## கடுமையான பயிற்சி



(சென்னை)

ஊடற்தகுதியை தக்கவைப்பதற்காக கடுமையாகப் பயிற்சி செய்து வருகின்றேன் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

உடல் நிலையைத் தொடர்ந்து ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு நல்ல தூக்கம், நிறைய தண்ணீர் குடிப்பது அவசியம். அடிக்கடி போட்டிகளில் பங்கேற்பதற்காகவெளியூர் செல்வதால், வீட்டு உணவு கிடைக்காமல் திண்டாடுவேன். காலையில் எழும் போது புத்துணர்வுடன் இருக்க வேண்டும்.

அது மிகவும் முக்கியம். சூப்பர் கிங்ஸ் வீரர்கள் அனைவரும் ஒருங்கிணைந்துவிளையாடி வருகிறோம். இளம் வீரர்கள் நன்கு பங்களிக்கின்றனர்.றோயல் சலஞ்சர்சுடன்சென்னையில் நடந்த போட்டியில் கடைசி வரை வெற்றி யாருக்கு என்பீதைக் கணிக்க முடியவில்லை. கடைசிப் பந்து நோ போல் ஆக அமைந்து, நாங்கள் வெற்றி பெற்றது தெரிந்தபோது எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்




கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர்
கொல்கத்தா நைட் ரைடர்ஸ்
இடம்: மொகாலி
மாலை 4.00 மணி

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் எதிர்
டில்லி டெர் டெவில்ஸ்
இடம்: பெங்களூர்
மாலை 8.00 மணி

# வலய மட்ட வலைப்பந்து அராலி சரஸ்வதி சம்பியன்



அராலி சரஸ்வதி வித்தியாலயம்



தெல்லிப்பளை யூனியன் கல்லூரி



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

(தெல்லிப்பளை)

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி வித்தியாலய அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வலிகாம கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த 11,12ஆம் திகதிகளில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும் மோதின.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, அராலி சரஸ்வதி வித்தியாலய அணியை வீழ்த்தி இலகுவாக சம்பியன்பட்டத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இதற்கு முற்றிலும் எதிராக அராலி சரஸ்வதி வித்தியாலய வீராங்கனைகளின் ஆட்டம் அமைந்திந்தது. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அராலி சரஸ்வதி வித்தியாலய அணி முதல் பாதி ஆட்டத்தில் 11-6 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் சுதாகரித்துக் கொண்டு சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றும் முனைப்புடன் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி களமிறங்கியது. எனினும், முதல் பாதி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியது போன்று பிற்பாதி ஆட்டத்திலும் அராலி சரஸ்வதி வித்தியாலயம் ஆதிக்கம் செலுத்தியது. பிற்பாதி ஆட்டத்தில் 9-2 என்று முன்னிலை பெற்ற அராலி சரஸ்வதி வித்தியாலயம், முடிவில் 20-08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று வலய மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணியும் மோதின. இதில் முற்பாதி ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய விக்ரோரியாக் கல்லூரி அணி 8-5 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சி பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 12-08 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. இறுதியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 17-16 என்ற கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொணடது. (93)

# சாரங்கனின் கோல் மழை கிண்ணம் வென்றது பொம்மர்ஸ்





(கரணவாய்)

இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரில் வதிரி பொம்மர்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை 4.30 இமையாணன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வதிரி பொம்மர்ஸ் அணியும், கொற்றாவத்தை சிவானந்தா அணியும் மோதின. ஆரம்பத்தில் கொற்றாவத்தை சிவானந்தா அணி மிகவும் சிறப்பான முறையில் ஆடியது. அதன் பந்துப் பரிமாற்றம் பார்ப்போர் கண்களுக்கு விருந்தாக இருந்தது. அந்தளவிற்கு அவர்களின் ஆட்டம் அழகுற அமைருந்தது. இருப்பினும் கோல் அடிக்கும் வாய்ப்பு அந்த அணிக்கு அதிகளவில் இருக்கவில்லை. பொம்மர்ஸ் அணிக்கு முற்பாதி ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் மூல உதை மூலம் கோல் போடும் வாய்ப்பிருந்தது. இருப்பினும்அந்த வாய்ப்பை சரிவர அதனால் பயன்படுத்தமுடியவில்லை. முற்பாதி ஆட்டத்தின் இறுதி நேரங்களில் வதிரி பொம்மர்ஸ்அணி ஆதிக்கம் செலுத்தி கோல்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் இருந்தபோதும் அதை உரிய முறையில் பயன்படுத்தவில்லை. இறுதியில் இரு அணிகளும் கோல் பெற்றுக்கொள்ளப்படாத நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மீள் ஒழுங்குபடுத்தப்பட்டு புதிய களவியூகத்துடன் வதிரி பொம்மர்ஸ் அணி களமிறங்கியது. இதன் பயனாக பிற்பாதி ஆட்டத்தின் 1ஆவது நிமிடத்தில் பொம்மர்ஸ் அணி வீரர் வைகுந்தனால் முதலாவது கோல் பெற்றுக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து எழுச்சியுற்ற பொம்மர்ஸ் அணி கோல் மழை பொழிந்தது. குறிப்பாக சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் அடுத்தடுத்து கோல் மழை பொழிந்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். ஹட்ரிக் கோல் அடித்த சாரங்கன் இரசிகர்கள், ஆதரவாளர்களின் கரகோஷ மழையில் நனைந்தார். பிற்பாதி ஆட்டத்தில் 13, 18, 16ஆவது நிமிடங்களில் ஹட்ரிக் கோல் அடித்து அசத்திய சாரங்கன், ஆட்டம் நிறைவடைய இரண்டு நிமிடங்கள் இருக்கும் நிலையில் மீண்டுமொரு கோல் அடித்து அசத்தினார். இறுதியில் வதிரி பொம்மர்ஸ் அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடர் நாயகனாகவும் பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் தெரிவு செய்யப்பட்டார். இத்தொடரில் அவர் மொத்தம் 13 கோல்களைப்பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றிக்கு பக்கபலமாகத் திகழ்ந்தார். தொடரின் நன்னடத்தை வீரராக கொலின்ஸ் அணி வீரர் கே. சுரேஸ், சிறந்த தடுப்பாளராக சிவானந்தா அணியைச் சேர்ந்த காண்டீபன், சிறந்த கோல் காப்பாளராக பொம்மர்ஸ் அணியைச் சேர்ந்த எஸ். நேசுதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபா ஆகியோர் கிண்ணங்களை வழங்கிக் கௌரவித்தனர். (12)

# வேலணையில் இன்று ஆண்டு நிறைவு கால்பந்து




(வேலணை)

வேலணை - செட்டிபுலம் ஐயனார் சனசமூக நிலையம் மற்றும் செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக்கழகம் இணைந்து நடாத்தும் ஆண்டு நிறைவு கால்பந்தாட்டப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை இடம் பெறவுள்ளது.

செட்டிபுலம் ஐயனார் சனசமூக நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படுகின்ற இக்கால்பந்துப் போட்டித் தொடரில் தீவகத்தைச் சேர்ந்த அணிகள் மட்டுமே பங்குகொள்கின்றன.

விலகல் முறையில் இடம்பெறும் இப்போட்டித் தொடரில் 36 அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன எனவும், இரண்டு பிரிவுகளிலும் முதலிடங்களைப் பிடிக்கும் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

போட்டிகள் யாவும் செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அணிக்கு ஒன்பது போர் கொண்ட இப்போட்டித் தொடரில் புங்குடுதீவு காந்தி 'ஏ', 'பி', துறையூர் ஐயனார் 'ஏ', 'பி', ஊர்காவற்றுறை முத்தமிழ், புங்குடுதீவு பாரதி 'ஏ', 'பி', புங்குடுதீவு சென். சேவியர் 'ஏ', 'பி', புங்குடுதீவு நண்பர்கள் 'ஏ', 'பி', நாரந்தனை அண்ணா 'ஏ', 'பி', நயினை அண்ணா, செட்டிபுலம் ஐயனார் 'ஏ', 'பி', நயினை ஞான வைரவர் 'ஏ', 'பி', மெலிஞ்சிமுனை இருதயராஜா 'ஏ', 'பி', மகேஸ்வரி 'ஏ', 'பி', அல்லைப்பிட்டி ஸ்ரீமுருகன், புங்குடுதீவு நசசேரத் 'ஏ', 'பி', எழுவைதீவு பாத்திமா, சென். ஜேம்ஸ், புங்குடுதீவு நிலாஜோதி, அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் 'ஏ', 'பி', இறுப்பிட்டி ஐங்கரன், ஊர்காவற்றுறை றேஞ்சஸ், புங்குடுதீவு சன்ஸ்ரார், நயினை இஸ்லாம், அனலைதீவு அருணோதயா, புங்குடுதீவு ஜனசக்தி அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

# தங்கள் பொருளாதார குடியேற்றங்களை அரசியல் தஞ்சம் என்கிற இலட்சியமாக முன்வைப்பதற்கு யுத்தமும் மற்றும் வன்முறைகளும் பல தமிழர்களுக்கு ஒரு சாட்டாக உள்ளது

**- என். சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.**

ஈழப்போர் 4இல் இறந்தவர்களின் எண்ணிக்கையை பற்றித் தீர்மானிப்பதற்கு இலங்கைக்கு வெளிநாட்டு உதவி தேவையாக உள்ளது, என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரூவான் வணிகசூரிய விளக்கியிருப்பதற்கு காரணம் உள்ளது. அவர் சொல்லியிருப்பதும் மிகச் சரியான கருத்தாகவும் உள்ளது. என்னவென்றால், இனமோதல்கள் இடம்பெற்ற வருடங்களில் பலர் வெளிநாடுகளுக்கு குடி பெயர்ந்துள்ளார்கள், போரின் கடைசி வாரங்களில் எல்.ரி.ரி.ஈ யின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட 300,000 பேர்களில் சிலர், அல்லது அந்த நேரத்தில் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப் பட்டிருந்தவர்களில் சிலர், வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றிருக்கலாம். ஜெனிவாவுக்கு பிந்தைய முயற்சிகளில், கற்பனையாக புனையப்பட்ட கூற்றுக்களைத் தவிர புதிதாக ஒன்றுமில்லை.

தங்கள் பொருளாதார குடியேற்றங்களை அரசியல் தஞ்சம் என்கிற இலட்சியமாக முன்வைப்பதற்கு அரசாங்க அனுசரணை வகையைச் சேர்ந்த யுத்தமும் மற்றும் வன்முறைகளும் பல தமிழர்களுக்கு ஒரு சாட்டாக உள்ளது, கிட்டத்தட்ட சிங்களம் மட்டும் போராட்டத்திலிருந்து மற்றும் இனப்போர் வன்முறைகள் நடைபெற்றதன் பின்னரும் இது தொடர்கிறது. அநேக நாடுகளில் உள்நாட்டு குடியுரிமை பெற்ற இலங்கைத் தமிழர்கள் அந்தந்த நாடுகளில் பிறந்த அவர்களின் பிள்ளைகளை தவிர்த்து அந்த நாடுகளின் உள்நாட்டு தேர்தல் அளவை மாற்றுவதற்கு ஏற்ற போதுமானளவு தொகையினராக உள்ளனர். சிலர் தெரிவிக்கும் கூற்றுக்களின்படி அந்தத் தொகை கிட்டத்தட்ட ஒரு மில்லியன் வரை சேர்ந்திருக்கிறது.

ஐரோப்பாவிலும் மற்றும் பல இடங்களிலும் உள்ள சட்டபூர்வமற்ற இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கையும் பரவலாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. யுத்தத்துக்கு பின்னான செய்தியறிக்கைகள் சுட்டிக்காட்டுவது அமைச்சர்கள் மற்றும் சிங்கள படைவீரர்கள் கூட இடம் பெயர்ந்தவர்கள் முகாம்களிலிருந்து மனிதக் கடத்தல்களை மேற்கொள்வதில் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று அவுஸ் ரேலிய கரைகளில் பிடிபட்ட படகு ஆட்கள் கூட காணாமற்போனவர்கள் என்கிற பெரும் சமுத்திரத்தின் சிறு துளிகள்தான்.




ஐ.நா.வின் முந்தைய அறிக்கையின்படி போரில் இறந்தவர்களின் தொகை 7,000 என்பதையும் மற்றும் தருஸ்மன் அறிக்கை வழங்கிய இறந்தவர்கள் தொகை 40,000 என்பதையும் ஒருபுறமாக ஒதுக்கிவிட்டு பார்ப்போமானால், உள்நாட்டு தமிழ் நிறுவனங்களின் ஆய்வுகள் மிகப் பெரிய தொகையான 180,000 என்பதை வழங்கியுள்ளன. இது இறந்தவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் பற்றி அரசாங்கம் மீளாய்வு செய்வதற்கு பேருதவியாக இருக்கும், மற்றும் அந்த இறந்த மற்றும் காணாமற் போனவர்களை வெளிநாட்டு நிலங்களில் கண்டுபிடிக்கவும் முடியும்.

அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா சொல்லியிருப்பதிலிருந்து தெரிய வருவது, எல்.எல்.ஆர்.சி அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு அமைச்சரவை ஒரு 18மாத காலக்கெடுவை நிர்ணயித்துள்ளது என்று பொறுப்புக்கூறற் பகுதி ஆயுதப்படையினரினாலே கையாளப்படும் என்கிற விடயம் அதில் உட்பட்டிருக்கிறதா என்பதை அவர் தெரிவிக்கவில்லை, அது இந்த தொகை பெரியதா அல்லது சிறியதா என்கிற எண்ணிக்கையை வெளியே கொண்டுவரும். தங்களின் பங்கிற்கு புலம்பெயர் தமிழர்கள் இறந்தவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் பற்றிய தங்கள் சொந்த கணக்கெடுப்பின் தொகையை உறுதிப்படுத்த வேண்டும், அவர்களின் கோரிக்கைகள் நியாயமானவையாக இருந்தால், அரசியல் தஞ்சம் என்கிற பெயரில் தாங்கள் தொடர்ந்து நடாத்திவரும் பொருளாதார குடியேற்றத்தை மேற்கொள்வதற்கு மீண்டும் வெட்கக்கேடான முறையில் உலக உணர்வுகளை பயன்படுத்தக்கூடாது.

இதன் கருத்து, போர்க் குற்றம் மற்றும் பொறுப்புக் கூறல் சம்பந்தமாக எழுந்துள்ள குற்றச் சாட்டுகளில் உண்மை இல்லை என்பதல்ல. பிரிகேடியர். ரூவான் வணிகசூரிய சொல்லியுள்ளதைப்போல, எண்ணிக்கையை சரிபார்த்து மற்றும் மீளாய்வு செய்வதால் மட்டுமே குற்றம் மற்றும் தண்டனை என்பனவற்றுக்குரிய பிரச்சினையின் அளவு மற்றும் தீவிரம் ஆகியவற்றை பற்றிய ஒரு கருத்து ஏற்படும். இலங்கையின் விடயத்தில் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகம், ஐ.நா. மனித உரிமைகள் சபை மற்றும் ஏனையவர்கள் ஆகியோர்களின் செல்வாக்கற்ற பார்வையின் முன்னிலையில் கொழும்பு அரசாங்கம் கைகட்டி நிற்கிறது, ஆனால் இந்தப்பாலத்தை தாண்டியே ஆகவேண்டும்.

# மூளையில் மின்சாரம்!



“நாம் சாதாரணமாக 10 சதவீத மூளையைத்தான் பயன்படுத்துகிறோம். 100 சதவீதம் பயன்படுத்தினால், விஞ்ஞானி ஐன்ஸ்டீன் போல் இருப்போம்” என்று அடிக்கடி கூறப்படுகிறது. ஆனால், அந்தத் தகவல் சரியல்ல. உண்மையில் நமது உடலில் நூறு சதவீதம் வேலை செய்யும் உறுப்பு மூளைதான். ருசி, வாசனை, தொடுதலை அறிதல், சிந்தித்தல், பேசுதல் என நம் மூளை ஓயாது எந்நேரமும் வேலை செய்துகொண்டே இருக்கிறது. மூளை பற்றிய சில தகவல்கள்...

❙ வளர்ந்த மனிதனின் மூளை எடை 1.5 கிலோகிராம்.

❙ ஒவ்வொரு நொடியும் நமது மூளைக்குள் 1 லட்சம் அமில மாற்றங்கள் நமக்குத் தெரியாமலே நடக்கின்றன.

❙ நமது மூளையில் உள்ள இரத்த நாளங்களை விரித்து நீட்டினால், 1 இலட்சத்து 60 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்துக்கு அவை நீளுமாம்.

❙ மூளையில் 2 வயதில் தான் மிக அதிக கலங்கள் அமைகின்றன. பிறகு அவை குறைய ஆரம்பித்து விடுகின்றன.

❙ வாழ்க்கையில் மூளை, குவாட்ரிலியன்... அதாவது, 10 கோடியே கோடி தகவல்களை தனித்தனியாக தனக்குள் தக்க வைத்துக் கொள்கிறது!

❙ 18 வயதில் மனிதனின் மூளை வளர்வதை நிறுத்திக் கொள்கிறது.

❙ நம் மூளை செயற்படும்போது 10 முதல் 23 வோல்ற் அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.

❙ மனித உடலில் உள்ள இரத்தத்திலும் ஒட்சிசனிலும் 20 சதவீதத்தை மூளைதான் பயன்படுத்துகிறது.

❙ மனித மூளை மணிக்கு 431 கி.மீ வேகத்தில் செயற்படக் கூடியது.

❙ வலியை அறியும்போது ஆணின் மூளை வேறு மாதிரியும் பெண்ணின் மூளை வேறு மாதிரியும் செயற்படுவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

❙ பெண்களுக்கான சிறப்பு ஓமோனாக அறியப்படும் ஈஸ்ட்ரொஜன் நினைவுத் திறனை வளர்க்கக் கூடியது என்று கண்டறியப்பட்டுள்ளது. அதனால்தான் பெண்கள் அதிக ஞாபகசக்தியோடு இருக்கிறார்கள் போலும்.

❙ மனிதர்கள் எல்லோருக்குமே கனவுகள் வரும். சிலர் அதை மறந்துவிட்டு, “கனவு காணுவதில்லை” என்று சொல்வதுண்டு. உண்மையில் கனவுதான் மூளையின் உடற்பயிற்சி. நாம் விழிப்புடன் இருப்பதை விட கனவு காணும்போதுதான் மூளை அதிக செயற் திறனுடன் இருக்கிறதாம்.

❙ நாம் சிரிக்கும்போது நம் மூளையின் வெவ்வேறு ஐந்து பகுதிகளில் பலமான தாக்கம் ஏற்படுகிறது. மூளைக்கு அது கடும் வேலைதான்.

❙ இடது கை பழக்கம் கொண்டவர்களின் மூளையில். கார்பஸ் கொலாசம் என்ற பகுதி வலது கை பழக்கம் கொண்டவர்களை விட 11 சதவீதம் பெரிதாக இருக்கிறது.

❙ சமீபத்திய ஆராய்ச்சிப்படி மூளை கசக்கிப் பிழியப்படும் முதல் 3 டென்ஷன் வேலைகள்...

1. கணக்காளர்
2. நூலகர்
3. ட்ரக் ட்ரைவர்

## மூளை எடை

- ☆ பிறந்த குழந்தை 350-400 கிராம்
- ☆ யானை 4783 கிராம்
- ☆ பசு 425-458 கிராம்
- ☆ தங்கமீன் (Gold Fish) 0.097 கிராம்
- ☆ பீகிள் நாய் 532 கிராம்
- ☆ கொரில்லா குரங்கு 465-540 கிராம்.

# உண்மை தந்த நன்மை!

ஜெர்மனி தேசத்து மன்னர் பிரெட்ரிக் வில்லியம் ஒருநாள், நாட்டின் முக்கிய நகரத்தில் அமைந்திருந்த சிறைச்சாலை ஒன்றுக்குள் நுழைந்து சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் அங்கிருந்த கைதிகள் அனைவரும் அவரைப் பார்த்ததும் மிகுந்த பரிதாபம் நிறைந்த குரலில், “எங்கள் மீது கருணை காட்டுங்கள். எங்களை விடுதலை செய்யுங்கள். நாங்கள் அனைவரும் தவறு எதுவும் செய்யாத் நிரபராதிகள்...” என்று முறையிட்டனர்.

கைதிகளில் ஒருவன் மட்டும் வாய் திறந்து எதுவும் கூறாமல் தனியே நின்றுகொண்டிருந்தான்.

“நீ, நிரபராதி இல்லையா?” என்று அரசர் அவனைப் பார்த்துக் கேட்டார்.

“இல்லை, நான் குற்றவாளிதான். செய்த குற்றத்துக்கான தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்” என்றான் அவன்.

உடனே அரசர், “இவனை உடனே விடுதலை செய்யுங்கள்” என்று சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# கவிஞர் கே.டி.சந்தானம்



“என்ன பொருத்தம் நமக்குள் என்ன பொருத்தம்“ பாட்டில் “அங்கே என்னம்மா சத்தம்” எனக் கேட்டு கடைசியில் தானும் “ஆஹா என்ன பொருத்தம்” என பரவசமாகும் பெரியவரை யாரோ துணை நடிகர் என்று தான் எல்லோரும் நினைப்பர். ஆனால், அவர் ஒரு கவிஞர். கவிஞர் கே.டி.சந்தானம்.

“காவேரி ஓரம் கவி சொன்ன பாடல் கதை சொல்லி நான் பாடவா, உள்ளம் அலை மோதும் நிலை கூறவா” என்ற சுசிலா பாடிய “ஆடிபெருக்கு” படப்பாடலை ஏ.எம்.ராஜா இசைக்கு எழுதியவர்.



“கண்காட்சி” என்ற ஏ.பி. நாகராஜன் படத்தில் குன்னக்குடி வைத்யநாதன் இசையில் கே.டி.சந்தானம் எழுதிய பாடல் தொகையறா ஏ.பி.நாகராஜனே தன் மென்மையான குரலில் சொல்வார்.

“வெண்ணிலவை குடை பிடித்து,
வீசு தென்றல் தேர் ஏறி, மென்
குயில் தான் இசை முழங்க, மீன்
வரைந்த கொடியசைய, கண்கவரும்
பேரழகி, கனகமணி பொற்பாவை,
அன்னநடை ரதியுடனே, அழகு
மதன் வில்லேந்தி தன்முல்லை,
மான், தனிநீலம், அசோகம் எனும்,
வண்ண மலர் கணை தொடுத்தான் வையமெல்லாம்
வாழ்கவென்றே!”

ஏ.பி.நாகராஜன் முடித்ததும் சந்தப்பாடல் ஆரம்பிக்கும்.

“அனங்கன் அங்கஜ்ஜன், அன்பன், வசந்தன்
மன்மதன் என்றும் வணங்கும் என் உயிர் மன்னவா,
மன்னுயிர்க்கின்பம் வழங்கும் உன் கதை சொல்லவா?”

கவிஞர் கே.டி.சந்தானம் பாசமலர் போன்ற வெற்றி படங்களில் நடித்தவர். தர்ம சங்கடம் என்ற உணர்வை அழகாக பாசமலரில் வெளிப்படுத்துவார்.

இவரை கதாநாயகியின் தந்தையாக இரண்டு காட்சிக்கு நடிக்க தேர்ந்தெடுத்திருந்தார்கள். முருகாலயா ஸ்ருடியோவில் ஷூட்டிங். நான் அந்தப் படத்தின் உதவி இயக்குனர். அவருக்கு மேக்கப் போடும்போது நான் அவரிடம் சென்று அவர் பாடல்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தேன்.

அவர் சொன்னார். “இந்த தலைமுறைக்கு என்னை யாரென்று தெரியாது. நீ தெரிந்து வைத்து என் பாடல்கள் பற்றிப் பேசுவது ஆச்சரியமாய் இருக்கிறது. இதே மாதிரி பல வருடங்களுக்கு முன் நீ பேசுவது போலவே என் பாடல்கள் பற்றி “அம்பிகாபதி” படத்தின் போது ஒரு பையன் என்னிடம் பேசினான். கண்ணதாசனின் அண்ணன் மகன். “அப்புச்சி பாட்டில் கூட உங்கள் சந்தம் மாதிரி வருவதில்லையே” - என்று ஆச்சரியப்பட்டான். அந்தப் பையன் பஞ்சு அருணாசலம் மாதிரி நீயும் ஒரு நாள் பெரிய ஆளாய் வருவாய்” - என்னை ஆசிர்வதித்து இப்படிச் சொன்னார்.

அவரிடம் பேசிய போது மேலும் பல விஷயங்கள் பற்றிச் சொன்னார்.

“அந்தக் காலத்தில் நாடக கம்பெனியில் சேர சிவாஜிகணேசன், காக்கா ராதாகிருஷ்ணன் இருவரையும் பாலகர்களாக அவர்கள் இருவரின் தாயார்கள் கூட்டி வந்தது இன்னும் என் கண்ணுக்குள்ளேயே இருக்கிறது” என்றார்..

பி.டி.சம்பந்தம் தான் எல்லோருக்குமே ஆசிரியர். அவர் ரொம்ப கண்டிப்பானவர். என்.எஸ். கிருஷ்ணனுக்கே அவர்தான் ஆசிரியர் என்ற இந்த செய்தியை அவர் தான் என்னிடம் முதலில் சொன்னார்.

எம்ஜியார் படம் இரகசிய போலிஸ் 115இல் நடித்த பின் அந்தக் காலத்தில் இவர் சந்தைக்கு காய்கறி வாங்கப் போனால் இவரை பின்தொடர்ந்து சிறு பிள்ளைகள் கூட்டமாக “என்ன பொருத்தம், ஆஹா என்ன பொருத்தம்” என்று பாடிக்கொண்டே வருவார்களாம்!

**- R.P.ராஜநாயஹம்**

# தங்கச்சிவந்தியா?



காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் சாமர்த்தியமாகப் பேசுவதில் வல்லவர். ஒருமுறை நண்பர் ஒரு- வருடன் உலாவச் சென்றபோது நடுவழியில் சற்றுப் பின் தங்கிவிட்டார். முன்னால் சென்ற நண்பர் தாமதமாகப் பின்னால் வந்து ரெட்டியாரிடம் காரணம் கேட்டார். “முட்டாளுடன் வந்ததால் தாமதமாகிவிட்டது” -என்றார். நண்பருக்கு ஒன்றும் புரியவில்லை. முட்டாள் என்று ரெட்டியார் யாரைக் குறிப்பிடுகிறார் என்று புரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தார். ரெட்டியார் சிரித்துக் கொண்டே, “நண்பரே... முள்தாளுடன், அதாவது முள் தைத்த காலுடன் வந்ததால் தாமதமாகிவிட்டது என்றேன்” என்றார்.

மற்றொரு சமயம் ஓர் அரண்மனையில் பொன்னிறமான சிவந்திப் பூக்களைத் தட்டில் வைத்துக் கொண்டு முன்பின் அறிந்திராத, பெண்ணொருத்தி வர, அவளைப் பார்த்து “தங்கச்சிவந்தியா?” என்று ரெட்டியார் கேட்டாராம். அந்தப் பெண்ணுக்கு ஒன்றும் புரியவில்லை. “யாரென்று தெரியாத என்னை தங்கச்சி என்கிறார்” என அவள் திகைத்தாள். உடனே ரெட்டியார், “இவை தங்கச் சிவந்தியா?” என்று பதம் பிரித்துத் திகைப்பைப் போக்கினார்!

**(‘சான்றோர் வாழ்வில் நடந்தவை’ என்ற நூலில்)**

# போருக்கு எதிராகப் போராடுவோம்

முதல் இரண்டு உலகப் போர்களைப் பார்த்த மனிதகுலம் போரையே வெறுக்கத் தொடங்கிவிட்டது. உலகப் போர்களால் ஏற்பட்ட சேதங்களும், மனித உயிர்களின் அழிவுகளும் எழுத்தில் அடங்காதவை. மிச்சம் மீதியிருந்த மக்கள் மனநோயாளிகளாகவே மாறிவிட்டனர்.

ஒருமுறை போரினால் ஏற்பட்ட அழிவுகளை ஈடுசெய்ய பல தலைமுறைகளாலும் முடியவில்லை. கல்,




- மு. வீரையன் கட்டுரையிலிருந்து.

வில், வாள், வேல், துப்பாக்கி, பீரங்கி என்று தொடங்கி இப்போது அணு ஆயுதங்களின் காலமாகப் போய்விட்டது. எனவே, போரைத் தொடுக்கும் நாடும், துணைபோகும் நாடுகளும்கூட இனித் தப்பிக்கவே முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது.

இரண்டாம் உலகப்போரின் முடிவில் வீசப்பட்ட அணுகுண்டுகளினால் ஏற்பட்ட அழிவு இன்னும் தொடர்கிறது. இனிமேல் போர் தொடங்கினால் அது அணு ஆயுதங்களின் போராகவே அமையும் அதனால் புல், பூண்டுகள் கூட மிஞ்சாது என்பதால் மக்கள் இந்தப் போரை வெறுக்கத் தொடங்கிவிட்டனர். போரை நேசிப்பவர்கள் மனநோயாளிகளாகவே இருப்பார்கள் என்று அறிவுலகம் முடிவு செய்துவிட்டது.

எனினும், போருக்கான சூழ்நிலை முற்றிலும் மறைந்துவிடவில்லை. அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் கெடுபிடியால் ஆப்கானிஸ்தான், இராக், எகிப்து, சிரியா எனப் போர் மேகங்கள் இடி இடித்து எல்லோரையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. எப்போது வேண்டுமானாலும் போர்மழை பெய்யலாம்.

வல்லரசு நாடுகளான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் மிகப்பெரிய வணிகமே ஆயுத விற்பனையாகும். இதற்காக நாடுகளுக்கிடையே பகைமை மூட்டியும், உள்நாட்டுப் போரைத் தூண்டியும் ஆயுத விற்பனைக்கு வழி செய்கிறது. வளைகுடா நாடுகளின் எண்ணெய் வளத்தினைக் கவரவும், ஆயுத விற்பனைக்காகவும் போர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்போது கொரிய தீபகற்பம் அவர்களுக்கு வாசலைத் திறந்து விடுகிறது.

இந்நிலையில், ஐ.நா. அவையில் கொண்டுவரப்பட்ட சர்வதேச ஆயுத விற்பனை கண்காணிப்பு ஒப்பந்தம் 154 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் இந்தியா, சீனா, ரஷியா, கியூபா, சவூதி அரேபியா முதலிய 23 நாடுகள் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்து வாக்கெடுப்பைப் புறக்கணித்தன. வடகொரியா, ஈரான், சிரியா ஆகிய மூன்று நாடுகள் ஒப்பந்தத்திற்கு எதிராக வாக்களித்தன.

உலகில் ஆயுத விற்பனையில் அமெரிக்காவே முதலிடம் வகிக்கிறது. அதன் பின்னர் ஐரோப்பிய நாடுகள் ஆயுத விற்பனையில் கொடிகட்டிப் பறக்கின்றன. இந்நிலையில், இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதன் மூலம் அமெரிக்கா நினைத்தால் ஒரு நாட்டுக்கு இந்த ஒப்பந்தத்தைக் காட்டி ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்ள முடியும் என்று இதனை எதிர்க்கும் நாடுகள் கூறுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவும், சீனாவும் இராணுவத்துக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றன. இந்தியா 2013 - 14 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 2 இலட்சத்து 3 ஆயிரத்து 672 கோடி ரூபா பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கியுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 14 வீதம் அதிகமாகும். கடந்த சில ஆண்டுகளாக இந்தியா அதிக அளவில் இராணுவ ஆயுதங்களை இறக்குமதி செய்து வருகிறது. இந்த ஐ.நா. ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக இனி இதனை அளவுகோலாகப் பயன்படுத்தி, அமெரிக்கா இந்தியாவின் ஆயுத இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் உள்நோக்கமும் இதற்குள் அடங்கி இருக்கிறது; இதன் மூலம் ஆசியப் பகுதியில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு இது வழி செய்யக் கூடும் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

ஒவ்வொரு நாடும் தங்கள் இறையாண்மையைக் காப்பதாகக் கூறிக்கொண்டு, இல்லாத எல்லையில் பதற்றத்தை ஏற்படுத்திக் குளிர் காய்கின்றன. அந்நியர்களால் ஆபத்து என்ற “கிலி”யை ஏற்படுத்தித் தங்கள் அரியணைகளைத் தக்கவைத்துக் கொள்ளவே முயல்கின்றன. இதுவும் ஒருவகையில் அரசு பயங்கரவாதம்தான், என்ன செய்வது?

கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள பதற்றமும் இப்படிப்பட்டதுதான். வடகொரியாவின் பின்னணியில் சீனாவும், தென்கொரியாவின் பின்னே அமெரிக்காவும் இருக்கின்றன. அத்துடன் இந்த நாடுகளிடம் அணுஆயுதங்களும் இருக்கின்றன. ஒரு தீப்பொறி பட்டாலும் உலகம் வெடித்துச் சிதறிவிடும்.

இப்போது வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா குவாம் தீவில் ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகளை நிறுவி வருகிறது. ட்ரக்குகளிலிருந்து ஏவக்கூடிய ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் அமெரிக்க நிலைகள் மீது அணுஆயுதத் தாக்குதல் நடத்தத் தமக்கு அனுமதி கிடைத்துவிட்டதாக வடகொரிய இராணுவம் கூறியுள்ளது. இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் உச்ச நிலையை அடைந்துள்ளது.

அணுயுகத்தின் தந்தையெனக் கூறப்படும் அல்பேர்ட் ஐன்ஸ்டீனிடம் ஒரு நண்பர் கேட்டார்: “மூன்றாவது உலகப்போரில் என்ன ஆயுதம் பயன்படுத்தப்படும்?” அதற்கு அந்த அறிவியல் மேதை தந்த பதில்: “மூன்றாவது உலகப் போரைப் பற்றி எனக்குத் தெரியாது. நான்காவது உலகப் போரில் கல்லும், வில்லுமே பயன்படுத்தப்படும்...”

இதற்கு என்ன பொருள்? மூன்றாம் உலகப்போர் வந்தால் அணு ஆயுதங்களால் உலகமே அழிந்து போகும் அதன் பிறகு கற்காலத்தில் இருந்துதான் நாகரிகம் தோன்றும் அப்போது கல்லும், வில்லும்தானே ஆயுதமாகும். இதைத்தான் அந்த அறிஞர் அவ்வாறு எச்சரித்துள்ளார். எனவே, மனிதகுலம் போருக்கு எதிராகப் போராட வேண்டும்.

# பிரிவினைவாத தந்திரோபாயங்களை பின்பற்றும் காலனித்துவ நாடுகள்

## அமைச்சர் திஸ்ஸவிதாரண விசனம்



(கொழும்பு)

காலனித்துவ நாடுகள் பிரிவினைவாத தந்திரோபாயங்களையே தொடர்ந்தும் பயன்படுத்தி வருவதாக சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இன, மத, ஜாதிப் பிரிவினைவாதத்தைப் பயன்படுத்தி காலனித்துவ நாடுகள் தங்களது ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட அதே தந்திரோபாயங்களே தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தங்களது அரசியற் கொள்கைகளுக்கு புறம்பாக செயற்படும் ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதில் காலனித்துவ நாடுகள் கூடுல் முனைப்புக் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இன, மத முரண்பாடுகளைத் தூண்டி அதன் மூலம் ஆட்சியைக் கவிழ்ப்பது மிகவும் சுலபமான வழிமுறையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை விவகாரங்கள் தொடர்பில் சென்னைக்கு போதியளவு புரிதல் கிடையாது எனவும், தப்பான அபிப்பிராயமே இந்த முரண்பாட்டு நிலைமைக்கான காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரித்தானியா விடுத்துள்ள பயண எச்சரிக்கையானது உண்மையான தகவல்களின் அடிப்படையில் வெளியிடப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குடும்ப அரசியல் நிலைப்பாடுகளில் உடன்பாடு கிடையாது எனவும், சோசலிசத்தையே தாம் போற்றுவதாகவும் அமைச்சர் விதாரண மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மும்மொழிகளிலும் அடையாள அட்டை

(கொழும்பு)

மும்மொழி தேசிய அடையாள அட்டையை விரைவில் அறிமுகம் செய்வது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். அடையாள அட்டை வழங்கல் எனது அமைச்சின் கீழ் இல்லை. எனினும் எனது அமைச்சு இதில் பங்களிக்கவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

முன்னர் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் அடையாள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டிருந்தபோதும் தற்போது மும்மொழி அடையாள அட்டை பற்றி ஆலோசிக்கப்படுகின்றது என அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டையின் முன் பக்கத்தில் சிங்களமே காணப்படுகின்றது. இதை மாற்றி மும்மொழி அடையாள அட்டையை வழங்குவதே எமது விருப்பமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் இந்த மாற்றத்தைக் கொண்டுவர ஒரு வருடமாவது எடுக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோதமாக தங்கியிருந்த 70 இலங்கையர் சவுதியில் கைது

(கொழும்பு)

சவுதி அரேபிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள இலங்கையர்கள் 70 பேர் தமாமிலுள்ள முகாமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

விசா காலாவதியான மற்றும் சட்டவிரோதமாக சவுதி அரேபியாவில் தங்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த முகாமில் வசதிகள் எதுவும் இல்லாததால் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக கைதுசெய்யப்பட்டுள்ள இலங்கையர்கள் செய்தி நிறுவனமொன்றிற்கு தெரிவித்தனர்.

தாம் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து சவுதியிலுள்ள இலங்கைத் தூரதரகத்திற்கு அறிவித்துள்ள போதிலும் அதற்கு எந்தவித சாதகமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் கூறியுள்ளனர்.

தூதரக அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக சுகவீனமடைந்திருந்த ஒருவர் கடந்த சனிக்கிழமை உயிரிழக்க நேரிட்டதாகவும், தமாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து வினவியபோது தமாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக உத்தியோகத்தர்கள் குழுவொன்று தடுப்பு முகாமிற்கு சென்றிருந்ததாக சவுதி அரேபியாவிற்கான இல்கைத் தூதரகத்தின் அமைச்சின் ஆலோசகர் அனுர முத்துமால தெரிவித்தார்.

அங்கு தங்கியுள்ள இலங்கையர்களில் பெரும்பாலானவர்களுக்கு மீண்டும் நாடு திரும்புவதற்காக சவுதி அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# 'வற்' மோசடிப் பேர்வழிகளை கைதுசெய்ய புதிய திட்டம்

(கொழும்பு)

வற் எனப்படும் பெறுமதி சேர் வரி மோசடியுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய இன்டர்போலின் உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வற் வரி மோசடியுடன் தொடர்புடைய எட்டு சந்தேக நபர்களை கைது செய்யவே இவ்வா்று சர்வதேச காவற்துறையினரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட உள்ளது. இவர்கள் பல மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ள வரி மோசடியாளர்களை கைது செய்ய சர்வதேச பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, வற் வரி மோசடியுடன் தொடர்புடைய ஆறு பேருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

# தமிழக மீனவர்களை கைது செய்யவில்லை

## கடற்படை அறிவிப்பு.

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் எவரையும் தாங்கள் கைது செய்யவில்லை என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் புதுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 9 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்திருந்தன. எனினும் இதனை மறுத்துள்ள கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ண குலசூரிய, இலங்கை கடற்படை எந்த ஒரு இந்திய மீனவர்களையும் கைது செய்யவில்லை என்று தெரிவித்தார்.

இந்த மாதத்தின் ஆரம்பத்திலேயே இலங்கைக் கடற்படையினரால் 56 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். ஏற்கனவே கடந்த மாதம் கைது செய்யப்பட்ட மீனவர்களில் 19 பேர் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கன் விமானிகளுக்கு போதிய சம்பளம் இல்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் விமானிகளுக்கு அதிகமான வேலைப்பளு கொடுக்கப்படுவதுடன், போதுமான கொடுப்பனவு செலுத்தப்படுவ்தில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நிறுவனத்துக்கு 275 தொடக்கம், 300 வரையான விமானிகள் தேவைப்படுகின்றனர். எனினும் தற்போது அதில் 200 பேர் மாத்திரமே கடமை புரிகின்றனர்.

அவர்கள் மத்தியில் மிகவும் அதிக வேலைகள் பகிரப்படுகின்றன.

எனினும் அவர்களுக்கான வேதனமும் சரியான முறையில் வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் எதிர்நோக்குகின்ற அதிக நிதி நெருக்கடியே இதற்கான காரணம் என்று கூறப்படுகிறது.

# வசந்த விழா

(சுன்னாகம்)

புதுவருடத்தை முன்னிட்டு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வசந்த விழா நிகழ்வு இன்று பிரதேச செயலர் சிறிமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பளை பிரதேசசெயலகத்திற்கு அருகிலுள்ள சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தில் காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.தாட்சாயினி அறிவித்துள்ளார். (95)

# குவைத், சவுதியிலிருந்து 88 பணியாளர் திரும்பினர்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமித்தம் சென்றிருந்த 88 இலங்கையர்கள் நேற்று அதிகாலை திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக விமானநிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன. இவர்கள் அனைவரும் தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ள அதேவேளை, பல்வேறு காரணங்களால் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குவைத்திலிருந்து 72 பெண்களும் சவுதியிலிருந்து 16 ஆண்களுமே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்களாவர். இவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பொறுப்பெடுத்து அவர்களின் பயணத்திற்கு தேவையான பணத்தினை வழங்கி அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.



அளவெட்டியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் புத்தாண்டு தினமான நேற்றுமுன்தினம் வைப்பிலிட்ட வாடிக்கையாளர்களுக்கான பரிசுப் பொருட்களை வங்கியின் வடபிராந்திய, உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ். நாகேஸ்வரன் வழங்கிவைப்பதனையும், வங்கிகிளை முகாமையாளர் எஸ்.சிவகுமார் உட்பட சக பணியாளர்கள் நிற்பதனையும் காணலாம்.

# செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனிதத்தன்மை பேணப்படுமா?

(வடமராட்சி)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனிதத்தன்மை தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புதுவருட தினமான நேற்று முன்தினம் ஆலயத்திற்கு பெருமளவான பக்தர்கள் வருகை தந்திருந்த நிலையில் ஆலய முன்றலில் குப்பைகள் குவித்து வைக்கபட்டிருந்தாகவும், கடல்க் காற்றினால் மரங்களின் காய்ந்த இலைகள் உதிர்ந்து ஆலய சூழல் முழுவதும் பரவிக் காணப்பட்டதாகவும், இதனால் சூழலின் புனிதத்தன்மை சுகாதாரமற்றதாகக் காணப்பட்டதாகவும் அடியார்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற இவ்வாலயத்திற்கு நாளாந்தம் வழிபாடுகளுக்காக மக்கள் வருகை தருகின்ற நிலையில், ஆலய சுற்றுப்புற சூழலிலும் சுத்தம் பேணப்படவேண்டும் எனத்தெரிவிக்கும் மக்கள், ஆலய சூழலில் திண்மக்கழிவுகள் அகற்றப்படாமல் துர்நாற்றம் வீசுவதாகவும், குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்பட்டால் இவ்வாறான சுகாதார சீர்கேடு இடம்பெறுவது தவிர்க்கப்படும் எனவும் மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாலயத்தின் புனிதத்தன்மையைப் பேணி அடியார்கள் சிரமமற்ற வழிபாட்டை மேற்கொள்ள உரியவர்கள் கவனம் எடுத்து செயற்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். 116)

# ஐ.ஓ.எம். நிறுவன பிரதிநிதிகள் ஆளுநருடன் கலந்துரையாடல்



இடம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் (ஐ.ஓ.எம்) நிறுவனத்தின் பிரதிநிதிகள் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை கொழும்பு பத்திரமுல்லவிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இடம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் திட்டத் தலைவர் றிச்சட் டான்சிகர், திட்ட துணைத்தலைவர் யூசெப் லோபிறிட் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர.

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. பிரதானமாக வீதி, விவசாயம், பாடசாலை, கிராமப்புற அபிவிருத்தி தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

# பாண்டியன்குளம் - செல்வபுரம் வீதி எப்போது புனரமைக்கப்படும்?

(மல்லாவி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாண்டியன் குளத்திலிருந்து செல்வபுரத்துக்குச் செல்லும் வீதி மணல் வீதியாக காணப்படுவதால் இவ்வீதியூடாக பயணம செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி நீண்டகாலமாக எவ்வித புனரமைப்புக்கும் உட்படாமல் மணல் வீதியாகக் காணப்படுவதுடன் குண்டும், குழியுமாகவுள்ளதால் மழை காலங்களில் வெள்ள நீர் தேங்கி நின்று இவ்வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இவ்வீதியூடாக உழவு இயந்திரம் மற்றும் பாரமான வாகனங்கள் செல்லுமிடத்து அவற்றின் சக்கரங்கள் மண்ணுக்குள் புதையும் அவலநிலையும் காணப்படுவதாக வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேறி மூன்றரை வருடங்கள் கழிந்துள்ள நிலையில், இவ்வீதி பிரதான வீதியாகக் காணப்படுவதால் இதனைப் புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என மக்கள் தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர். (140)

# சுவிஸ் முகவரகத்தால் விழிப்புணர்வுச் செயற்றிட்டம்


(கிளிநொச்சி)

சுவிஸ் தொழிலாளர் முகவரகம் (SAH) நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் ஏப்ரல் மாத இறுதியுடன் நிறைவுபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உதவிகள் வழங்கப்பட்ட ஆறு கிராமங்களிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு, வலுவூட்டல் நிகழ்வை காவேரி கலாமன்றத்தினர் அண்மையில் நிகழ்த்தினார்கள்.

காலை முதல் மாலை வரை முழு நாள் நிகழ்வாக இது நடைபெற்றது. இதற்கான நிதியை சுவிஸ் தொழிலாளர் முகவரகம் வழங்கியது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் காதலியார் சம்மளங்குளம், ஒதியமலை, கணேசபுரம், மாங்குளத்தில் பனிக்கங்குளம், அதனை அண்மித்த



இரு கிராமங்களிலும் இவ் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

கிராமச் சிறார்களுக்கு மகிழ்வூட்டும் கலை நிகழ்வுகள், பொதுமக்களுக்கான தெரு நாடகம், விழிப்புணர்வுக் கருத்துரைகள், பொதுமக்களுக்கான சமூகப் பொறுப்பு பற்றிய தகவல்கள் அடங்கிய சிறு நூல், சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கல் என்பவை இடம்பெற்றன.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இந்நிகழ்வுகளில் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள். (90)

# பதிவிறக்கப் பெட்டகம்

அன்பு என்பது வாழ்வின் மீது நமக்கு உள்ள விருப்பத்தை வெளிப்படுத்தும் மார்க்கம். அன்புக்கு ஆள் முக்கியமில்லை. வாழ்வில் இருந்து அடையும் மகிழ்ச்சி தான் அன்புக்கு அடிப்படை. அதனால் பிறரையோ பிறிதையோ நேசிக்கும் ஒருவன் அடிப்படையில் தன்னை நேசிக்கிறான். பிறரை வெறுப்பவன் தன்னைத் தான் முதலில் வெறுக்கிறான்.

– எரிக் புரோம்

காதல் என்பதில் காமம் இருப்பினும், காமம் என்பதில் காதலே இல்லை. எதை அன்புடன் நடத்துகிறோமோ, எங்கு மரியாதை காட்டுகிறோமோ, அங்கிருந்துதான் அன்பும் மரியாதையும் திரும்பக் கிடைக்கும். அந்த அன்புக்கும், மரியாதைக்கும் காதல் என்று பெயர். அந்தக் காதல் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள காமம் என்ற விஷயத்தைப் பயன்படுத்திக்கொள்கிறது. அப்போது காதல் பரிபூரணமாகிறது. இன்னும் பெரிதாக மலர்ச்சியடைகிறது. ஒருவர் தன் காதலைக் கவிதை மூலம் சொல்வதைவிட, கதை மூலம் சொல்வதைவிட, காமத்தின் மூலம் சொல்வதில் சந்துஷ்டி இருக்கிறது. நிறைவு இருக்கிறது. காதலைச் சொல்ல காமம் ஒரு உபாயம் அவ்வளவே.

– பாலகுமாரன்

தமிழ் இலக்கியத்தில் மரபாகக் காதலை தெய்வாம்சமான நிலையில் வைத்துப் பூஜிப்பது இருக்கத்தான் செய்கிறது. அந்தவகையில் பார்த்தால் ஜி.நாகராஜனும், அருணகிரிநாதரும் ஒரே ஆள்தான். அருணகிரிநாதர் மதத்திற்குள்ளாகத் தன்னை நிறுத்திக்கொண்டு தனது இச்சைகளைப் பாவம் என்று அறிவித்துச் சரணாகதி அடைந்துவிட்டார். ஆனால் ஜி.நாகராஜனுக்கு அது பாவமில்லை. பொதுவில் இச்சையைக் கொண்டாடுவது என்பது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. உடனே குற்ற மனப்பாங்கு உருவாகிவிடும். கடவுள், பாவம் என்று எதையாவது போட்டு இச்சையை மறைத்துவிடுவோம். நாகராஜன் இச்சையை அனுமதிக்கிறார். அதன் முட்டுச்சந்துகளில் அலைந்து திரிகிறார். ஆச்சரியம் என்னவென்றால் தமிழ் வாசகனுக்கு இரண்டு பேருமே சரி என்று தோன்றுகிறது. இதுபோன்ற விஷயங்களில் வாசகர்கள், முடிவு செய்வதை விடவும் பகிர்ந்து கொள்வதே போதும் என்று நினைத்து விடுகிறார்கள். – தேவதச்சன்

இளமை எனது புலன்களில் ஒரு சூறாவளியைக் கட்டவிழ்த்து விட்டது. எனது உடலின் விருப்பங்களுக்கு எதிராகக் கதவுகளை அடைத்துவிட நான் விரும்பவில்லை. மாறாக, நான் அதன் கொண்டாட்டங்களில் காணாமல் போகவே ஆசைப்பட்டேன். – சாரா ஜோசப்

பாலியல் நாட்டமானது வெட்கப்படத்தக்க தனிமனித இரகசியமாகவும், சமூக மனிதனை எடுத்து நிறுக்கும் எடைக்கல்லாகவும், குடும்ப கௌரவத்தைத் தகர்க்கவல்ல வெடிமருந்தாகவும், சமூகத்தை வழிநடத்தும் குற்றவியல் சட்டமாகவும் கற்பிக்கப்படுகிறது. ஒரு கற்பிதமே அடிப்படை ஒழுக்கமாகும்போது, ஒழுக்க மீறல்களே அதன் நிரந்தரக் குறையாகி விடுகின்றன. – அ. மார்க்ஸ்


ஆண் பெண் உறவில் கணவன் மனைவி உறவென்பது, சுதந்திரம் என்பது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. மனைவியை ஒரு முழம் மல்லிகைப் பூவிலும் ஒரு பட்டுப் புடவையிலும் சந்தோஷப்படுத்தி விடலாம் என்ற அபத்தமான நம்பிக்கையில் கணவன் இயங்குகிறான். உண்மை அப்படி அல்ல. ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ளுதல். இது சகமனிதனைப் புரிந்து கொள்ளுதலின் தொடக்கம். சகமனிதனை சகித்துக்கொள்ள முயலவேண்டும். சக மனிதனைப் புரிந்துகொள்ள முயலவேண்டும். முடியுமானால நான் சகமனிதன்மீது அன்பு செய்ய முயலவேண்டும். உலகம் அயோக்கிய மயமாக இருக்கட்டும். நான் அதற்குத் தயாரில்லை. உலகம் வன்முறைகளில் ஈடுபட்டுத் துன்புறட்டும். நான் அதற்குத் தயாரில்லை. உலகம் கிட்னி திருடி, சாராயம் விற்று, கலப்படம் செய்து, மோசடி செய்து, விபச்சாரம் செய்து பணம் ஈட்டட்டும். நான் அதற்குத் தயாரில்லை. ஏனெனில் என் போன்ற சிறுபான்மையினர், நம் போன்ற சிறுபான்மையினர் தாம் உலகத்தின் சம நிலையைக் காப்பாற்றி வருபவர்கள். நமக்கு வாய்த்திருக்கும் நல்ல தன்மைகளை அற்ப சுகங்களுக்காக இழக்க நாம் தயாராக இல்லை. – நாஞ்சில் நாடன்

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

உயிரியல்

ஆசிரியர் : S.T. ஜனார்த்தனன் (B.sc)

(01) A) 1) புவியின் காலநிலைப் பிரதேசங்களின் பரம்பல் பின்வரும் வரை படத்தில் காட்டப்பட்டுள்ளது.




குறியீடுகளைப் பயன்படுத்தி பின்வரும் உயிரியல் கூட்டங்களை (Biomes) சுட்டிக்காட்டுக. அவற்றிற்குரிய தனித்துவமான தாவரங்களையும் குறிப்பிடுக.

| | பரம்பல் | தனித்துவமான தாவரம் |
|---|---|---|
| 1. பாலைவனம் | .................... | .................... |
| 2. இடைவெப்ப புல்நிலம் | .................... | .................... |
| 3. தைகா (Taiga) | .................... | .................... |
| 4. பரட்டைக்காடு (Chapparal) | .................... | .................... |
| 5. தண்டிரா(Tundra) | .................... | .................... |

2) புல்நிலம் ஒன்றின் உற்பத்தித் திறனைப் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

a) சூழற் தொகுதியில் படுகின்ற சூரியசக்தி $4.65 \times 10^{\theta}$

b) மொத்த முதலுற்பத்தி $4.83 \times 10^{6}$

c) தேறிய முதலுற்பத்தி $4.95 \times 10^{4}$

i. படுகின்ற சூரிய ஒளியின் எத்தனை சதவீதமானது குளோரோபில்லினால் உறிஞ்சப்பட்டு சேதன மூலக்கூறுகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றது?

..............................................................................

..............................................................................

ii. a. உயிர்த்திணிவாக சேமிக்கப்படுவது எத்தனை சதவீதம்?

..............................................................................

b. தேறிய உற்பத்தி, மொத்த உற்பத்தியை விட குறைவாக இருப்பதன் காரணம் யாது?

..............................................................................

..............................................................................

iii. சூழல் தொகுதி ஒன்றில் ஒரு போசணை மட்டத்திலிருந்து அடுத்த மட்டத்துக்கு செல்லும் போது கிடைக்கக்கூடிய சக்தியின் அளவில் பாரிய வீழ்ச்சி காணப்படுவதற்கான காரணம் யாது?

..............................................................................

..............................................................................

iv. சமுதாயம் ஒன்றானது இயங்குநிலைக்கு வரவேண்டுமாயின் அதில் காணப்படவேண்டிய இரண்டு செயன்முறைகள் தருக.

a. ........................ b. ........................

B) 1) பின்வரும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஓமோன்கள் எவை?

a) பழம் பழுத்தலைத் தூண்டல் ........................

b) கலப் பிரிவைத் தூண்டுதல் ........................

c) அங்குரத்தின் விரைவான நீட்சி........................

2) நெல் வயல்களில் களைகொல்லியாக பயன்படுத்தப்படும் செயற்கை ஓமோனின் இரசாயனப் பெயரைத் தருக.

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

3) கன்னிக் கனியமாதலை எவ்வாறு செயற்கையாகத் தூண்டலாம்.

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

C) 1) $C_3$, $C_4$ தாவரங்கள் ஒளித்தொகுப்பு தொடர்பான பின்வரும் அட்ட வணையை நிரப்புக.

| | $C_3$ தாவரம் | $C_4$ தாவரம் |
|---|---|---|
| a) முதல் உறுதியான விளைவு | .................... | .................... |
| b) முதலாவது $CO_2$ பதித்தல் | .................... | .................... |
| c) $CO_2$ வாங்கி மூலக்கூறு | .................... | .................... |
| d) $CO_2$ பதித்தலுக்குத் தேவையான நொதியம் | .................... | .................... |
| e) உற்பத்தித்திறன் | .................... | .................... |

2) தாவரத்தின் வளர்ச்சி என்பதால் விளங்கிக் கொள்வது யாது?

..............................................................................

..............................................................................


3) தாவரத்தின் நீளவளர்ச்சியை அளவிடும் உபகரணம் யாது?

..............................................................................

..............................................................................

..............................................................................

4) கீழே தரப்பட்ட இடைவெளியில் ஆண்டுத்தாவரம் ஒன்றின் நாற்று நிலையிலிருந்து இறப்பு வரையான வளர்ச்சிவீதத்தைக் காட்ட நேரத்துக்கு எதிராக வரைபொன்றை வரைக.



5) தாவரங்களில் வளர்ச்சியை ஏற்படுத்தும் கலமட்டத்திலுள்ள மூன்று செயன்முறைகள் யாவை?

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

6) புன்வெற்றிட கலமொன்று தொடர்பாக பின்வரும் பதங்களை விளக்குக.

1. கரைய அழுத்தம்

..............................................................................

..............................................................................

2. அமுக்க அழுத்தம்

..............................................................................

..............................................................................

**பின்வரும் செயற்பாடுகளை அளவிட பயன்படுத்தும் உபகரணங்களைத் தருக.**


3. தாவரங்களின் ஆவியுயிர்ப்பு வீதம்

..............................................................................

4. நீர்த்தாவரத்தில் ஒளித்தொகுப்பு

..............................................................................

3) A) பெண்ணொருவரின் மாதவிடாய் வட்டத்தின் போது குருதியில் ஓமோனின் மட்டங்கள் கீழுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.



1) a) ஓமோன்கள் P, Q வை இனங்காண்க.
P .................... Q ....................

b) பொருத்தமான விருத்தியடைந்த சூலகப்புடைப்பின் மீது P இன் சடுதியான அதிகரிப்பு எவ்விளைவை ஏற்படுத்தும்?

c) 14 - 21 நாட்களுக்கு இடைப்பட்ட காலத்தில் P, Q ஓமோன்களின் மட்டங்களுக்கு இடையிலுள்ள இடைத்தொடர்பை விளக்குக.

2) வெளியேற்றப்பட்ட சூலை கடத்துவதில் பலோப்பியன் குழாய்களின் கட்டமைப்பு எவ்வாறு உதவுகின்றது?


3) புதிதாக வெளியேற்றப்பட்ட விந்து முதல் சில மணித்தியாலங்களுக்கு கருக்கட்டும் ஆற்றலைக் கொண்டிராததற்கான காரணம் என்ன?

4) a) கர்ப்பத்திலுள்ள சிசுவைப் பாதிக்கும் நிறமூர்த்த எண்ணிக்கை தொடர்பான நிறமூர்த்த அசாதாரண நிலைகள் இரண்டு தருக.

b) மேற்கூறப்பட்ட விகாரம் ஏற்படுவதற்கான காரணம் யாது?

5) நிறமூர்த்த அசாதாரண நிலை பற்றி பிரசவத்திற்கு முன்னர் எவ்வாறு கண்டறியப்படுகின்றது?

B) மனித சூல் வித்தகத்தின் அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.




1) a, b, c, d, e ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
a .................... d ....................
b .................... e ....................
c ....................

2) எக்குருதிக் கலன்
i) சிசுவிற்கு ஒட்சிசனையும், போசணையையும் கொண்டு செல்கின்றது?

ii) சிசுவிலிருந்து காபனீரொட்சைட்டையும் யூரியாவையும் வெளியே கொண்டு செல்கின்றது?

3) சூல்வித்தகத்தின் ஆக்கத்தில் பங்குகொள்ளும் முளைய மென்சவ்வுகள் எவை?

4) கருத்தரித்த காலத்தில் மனித சூல்வித்தகத்தால் சுரக்கப்படும் ஓமோன்களைத் தந்து அவற்றின் பிரதான தொழில் ஒன்றையும் தருக.

| ஓமோன் | தொழில் |
|---|---|
| .................... | .................... |
| .................... | .................... |
| .................... | .................... |

C) 1) குழந்தை பிறந்தவுடன் அதிக மாற்றத்திற்குள்ளாகும் அங்கத் தொகுதி யாது?

2) பிறப்பின் போது குழந்தையின் நுரையீரல்கள் விரிவதற்கு உதவும் இரசாயனப் பொருளிற்கு எப்பெயர் வழங்கப்படுகின்றது?

3) மனிதனில் சுவாசமையம் எங்கு அமைந்துள்ளது?

4) மனித சுவாசத் தொகுதியின் மூன்று தொழில்களைத் தருக.

D) 1) a) மனிதனின் சுருங்கல் அமுக்கம் என்பதிலிருந்து விளங்கிக் கொள்ளப்படுவது யாது?

b) ஆரோக்கியமான ஒருவரின் சாதாரண சுருங்கல் அமுக்கம் யாது?

2) நாடிக்குருதி அமுக்கத்தை சாதாரண மட்டத்தினுள் பேணுவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் மூன்று தருக.

3) இதயத் துடிப்பு வீதம், வலிமை என்பவற்றை அதிகரிக்கச் செய்யும் இரு ஓமோன்களைப் பெயரிடுக.

4) இதயத் துடிப்பு நிரோதிக்கும் மையங்களைத் தூண்டும் செய்திகளை அனுப்பும் அமுக்கவாங்கிகள் அமைந்திருக்கும் இடத்தைத் தருக.

5) மாற்றுப் பாதை சத்திரசிகிச்சை மூலம் எக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படுகின்றது?

4) A) 1) உணவை நற்காப்பு செய்ய வேண்டியதற்கான காரணங்கள் இரண்டு தருக.
a) ....................
b) ....................

2) உணவை நற்காப்புச் செய்யும் முறைகள் தொடர்பான அடிப்படைத் தத்துவங்கள் மூன்று தருக.
a) ....................
b) ....................
c) ....................

3) பின்வரும் உணவு நற்காப்பு தொடர்பான அடிப்படைத் தத்துவங்கள் யாவை?
a) மீன்களைத் தகரத்திலடைத்தல் ....................
b) கட்டிப்பால் தயாரித்தல் ....................
c) பாய்சரேற்றம் செய்யப்பட்ட பால்....................

4) தரப்பட்ட விருந்து வழங்கியின் எதிர்ப்பு பொறிமுறையுடன் தொடர்பான எழுத்துக்களை அவற்றுக்கு முன் குறிப்பிடுக.

A - உயிர்ப்பான செயற்கை
B - உயிர்ப்பற்ற இயற்கை
C - உயிர்ப்பான இயற்கை
D - உயிர்ப்பற்ற செயற்கை
E - இரசாயனத் தடை
F - தனித்துவமற்ற

i) - Tetanus தடைமருந்து (ஈர்ப்பு வலி)
ii) - கடும்புப் பால்
iii) - உடற்பாயத்துடனான நிரப்பீடணம்
iv) - இரைப்பையிலுள்ள Hcl
v) - கண்ணீரிலுள்ள இலைசோசோம்
vi) - நடுநிலை நாடிகளின் தொழிற்பாடு
vii) - உடல் வீக்கங்கள் தோன்றுதல்
viii) - Interferon
ix) - வாதனாளியிலுள்ள பிசிர்கள்

B) பின்வரும் ஒட்டுண்ணிகளின் தொற்றுப் பருவங்களையும், மனிதவிருந்து வழங்கிக்கு எவ்வாறு கடத்தப்படுகின்றன எனவும் எழுதுக.

| தொற்றும் பருவம் | கடத்தப்படும் முறை |
|---|---|
| 1. Ascaris .................... | .................... |
| 2. Necator .................... | .................... |
| 3. Entamoeba .................... | .................... |
| 4. Wuchereria .................... | .................... |

C) ஓரின வளர்ப்பை விட பல்லின வளர்ப்பிலுள்ள இரண்டு அனுகூலங்கள் தருக.

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

1) பீடை முகாமைத்துவத்தில் இரசாயனக் கட்டுப்பாட்டை விட உயிரியல் கட்டுப்பாட்டு முறையிலுள்ள அனுகூலங்கள் இரண்டு தருக.

..............................................................
..............................................................

2) தென்னையைத் தாக்கும் Coleoptera பீடைகளின் பொதுப் பெயர்களையும், சேதத்தை உண்டுபண்ணும் வாழ்க்கைவட்ட நிலைகளையும் தருக.

| பொதுப்பெயர் | சேதம் விளைவிக்கும் பருவம் |
|---|---|
| a. .................... | .................... |
| b. .................... | .................... |
| c. .................... | .................... |

3) மேற்கூறிய பீடைகளுக்குரிய பொதுவான கட்டுப்பாட்டு முறைகளைத் தருக.

a. ..............................................................
b. ..............................................................
c. ..............................................................

D) 1) நெல்லில் தோன்றும் மூன்று முக்கிய நோய்கள் எவை?

..............................................................
..............................................................
..............................................................

2) a) களைகளின் தாக்கத்தினால் நெற்பயிர்களின் வளர்ச்சி எவ்வாறு தடைப்படுகின்றது?

..............................................................
..............................................................

b) பிரதான களைக்கட்டுப்பாட்டு முறைகள் எவை?

..............................................................
..............................................................
..............................................................

3) தாவர இனக்கலப்பு என்பதன் கருத்து யாது?

..............................................................
..............................................................

**4) பின்வரும் பதங்களை விளக்குக.**

a) தெரிவு செய்யப்பட்ட இனக்கலப்பு

..............................................................
..............................................................

b) கலப்புப் பிறப்பாக்கம்

..............................................................
..............................................................
..............................................................

5) சிறந்த கலப்புப் பிறப்பாக்கத்தைப் பெற்றுக்கொள்ள, எடுக்க வேண்டிய முக்கிய நடைமுறைகள் எவை?

a) ..............................................................
b) ..............................................................

## பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. மனித கண்ணின் பிரிவலு அண்ணளவாக எவ்வளவு?
   01. 0.1mm 02. 0.5μm 03. 0.25μm
   04. 2mm 05. 1μm

02. பின்வருவனவற்றுள் எது கலக்கொள்கையில் உள்ளடக்கப்படவில்லை?
   01. உயிரங்கியின் அடிப்படையலகு கலம்
   02. உயிரங்கிகள் யாவும் தனிக்கலத்தால் ஆனவை.
   03. கலங்கள் யாவும் முன்பிருந்த கலங்களில் இருந்து தோன்றுகின்றன.
   04. உயிரங்கியின் அடிப்படை தொழிற்பாட்டலகு கலமாகும்.
   05. உயிரங்கியின் அடிப்படைக் கட்டமைப்பலகு கலமாகும்.

03. பின்வருவனவற்றுள் எது உயிரற்ற உயிருள்ள பொருட்களுக்குப் பொதுவானது எது?
   01. அசைவு 02. இசைவாக்கம் 03. தலைமுறையுரிமை
   04. உறுத்துணர்ச்சி 05. கழிவகற்றல்

04. பின்வரும் ஆட்சி நிரைகளில் எது மிகவும் தாழ்நிலையில் காணப்படுகின்றது?
   01. கலம் 02. கலப்புன்னங்கம் 03. உயிரியல் மூலக்கூறு
   04. இழையம் 05. அங்கம்

05. அழுத்தமற்ற அகக்கலவுருச்சிறுவலையின் தொழிலாக அமைவது?
   01. நச்சுத்தன்மை நீக்கல் 02. ஸ்திரோயிட் தொகுப்பு
   03. புரதத்தொகுப்பு 04. Ca அயன் சேமிப்பு
   05. ஒளித்தொகுப்பு

06. பின்வரும் மூலகச்சோடிகளில் எது நுண்போசணை மூலகங்களாகும்?
   01. Mn,Cu 02. N,P 03. C,H 04. Ca,Mg 05. K,O

07. காபோவைதரேற்றுகளில் ஐதரசனுக்கும் ஒட்சிசனுக்கும் இடையிலான விகிதம்?
   01. H: O= 2:1 02. H: O= 1:2 03. H: O= 3:1
   04. H: O= 1:3 05. H: O= 1:1

08. பினவருவனவற்றுள் எது $C_6$ காபன் வெல்லமாகும்?
   01. Glyceraldhyde 02. Erythrose 03. Ribose
   04. Ribulose 05. Galactose

09. பின்வருவனவற்றுள் எது விஞ்ஞான முறையின் மிக அடிப்படையானது?
   01. கருதுகோள் அமைத்தல் 02. அவதானம்
   03. எதிர்வுகூறல் 04. பரிசோதித்தல்
   05. கருதுகோள் நிராகரிப்பு

10. *Paramecium* போன்ற தனிக்கல அங்கிகளில் கழிவகற்றலுக்குப் பொறுப்பாகவுள்ள கலப்புன்னங்கம்?
   01. சுருங்கத்தக்க புன்வெற்றிடம் 02. லைசோசோம்
   03. Ribosome 04. இழைமணி
   05. கரு

11. பின்வரும் ஓமோன்களில் எது சிறுநீரகத்தில் தொழிற்படுகிறது?
   01. Insulin 02. ADH 03. Progestrone
   04. Erythropoietin 05. Ribosome

12. Testestorne சாதாரண சுகதேகி ஒருவரின் கலன்கோள வடிதிரவத்தில் காணப்படக்கூடியது?
   01. அல்பியூமின் 02. குருதிச்சிறுதட்டுகள்
   03. அமினோவமிலம் 04. நீர் 05. கனியுப்புக்கள்

13. உடற் சமனிலையுடன் தொடர்புபட்ட மனித செவியின் கட்டமைப்பு?
   01. ஊத்தேக்கியன் கால்வாய் 02. கோட்டியின் அங்கம்
   03. சம்மட்டியுரு என்பு 04. தொட்டி 05. பொட்டு

14. முள்ளந்தண்டு விலங்குகளின் ஒளிவாங்கிகளை ஒத்த ஒளிவாங்கிகளைக் கொண்ட முள்ளந்தண்டற்ற கணம்?
   01. Mollusca 02. Coelenterata
   03. Annelida 04. Arthropoda
   05. Platyhelminthes

15. விலங்குகளிடையே காணப்படும் சில கழிவகற்றும் கட்டமைப்புகளும், இக்கட்டமைப்புகளுடைய விலங்குகள் அடங்கும் கணங்களும் கீழே தரப்பட்டுள்ளன. பின்வரும் கழிவகற்றும் கட்டமைப்பு - கணம் சேர்க்கைகளுள் தவறான சேர்க்கை எது?

| கழிவகற்றும் கட்டமைப்பு | கணம் |
|---|---|
| 01. கழிநீரகம் | Annelida |
| 02. மல்பீசியன் உடல் | Arthropoda |
| 03. பசும் சுரப்பி | Mollusca |
| 04. சிறுநீரகம் | Chordata |
| 05. சுவாலைக்கலம் | Platyhelminthes |

16. பின்வருவனவற்றுள் எது கலமென்சவ்வின் தொழிலன்று?
   01. கலத்தின் வெளிப்புற எல்லையாக தொழிற்படல்
   02. கழிவுப் பதார்த்தங்களின் வெளியேற்றத்தை ஒழுங்காக்கல்
   03. கலத்தின் பிரசாரணச்சீராக்கலை மேற்கொள்ளல்
   04. பிறப்புரிமைப் பதார்த்தங்களைச் சேமித்தல்.
   05. கலங்களுக்கிடையில் தகவல் பரிமாற்றம் செய்தல்.

17. மனிதனின் அகச்சூழலில் சீராக்கப்படாதது பின்வருவனவற்றுள் எது?
   01. Urea 02. Glucose 03. காபனீரொட்சைட்டு
   04. வெப்பநிலை 05. நீர்

18. சூழலின் வெப்பநிலை குறையும்போது மனித உடலில் பின்வரும் செயன்முறைகளில் எது நடைபெறுவதில்லை?
   01. அனுசேபவீதம் அதிகரித்தல்
   02. வியர்வைச் சுரப்பிகள் நிரோதித்தல்
   03. வெப்ப இழப்புப் பொறிமுறைகள் நிரோதிக்கப்படல்
   04. ருபிணியின் சிறுதுணிக்கைகள் தூண்டப்படுகின்றன.
   05. தோலிற்கான குருதி வழங்கல் குறைதல்


19. ஒரு மூலக்கூறு ATP ஆனது ADP நீர்ப்பகுப்பு அடைவதனால் கிடைக்கும் சக்தி அண்ணளவாக?
   01. 30.6KJ 02. 12.4KJ 03. 15.3KJ
   04. 61.2KJ 05. 6.12KJ

20. மனித சிறுநீரகம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது?
   01. அது RBC உற்பத்தியுடன் தொடர்புபட்டது.
   02. அது உடலின் பிரதான பிரசாரணச் சீராக்கல் அங்கமாகும்
   03. அது குருதியின் pH இனை ஒழுங்காக்குகிறது.
   04. அது யூரியாவைத் தொகுக்கிறது.
   05. அது அகஞ்சுரக்கும் பகுதியாகத் தொழிற்படுகிறது.

21. பின்வரும் ஓமோன்களில் எது அனுசேபத் தொழிற்பாட்டை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்கிறது?
   01. Prolactin 02. Thyroxine 03. Melatonin
   04. ADH 05. Oestrogen

22. தாவரங்களை அவற்றின் தோற்றம் அடிப்படையிலும் வாழ்க்கைக் காலம் அடிப்படையிலும் பாகுபடுத்தியவர்?
   01. Carolus Linnaeus 02. Theoparatus
   03. Ernest Haeckel 04. `Aristotle
   05. Carl woese


## பிரதமர் வேட்பாளர் தெரிவில்
# ஐக்கிய ஜனதாத் தளம் நிபந்தனை
# நெருக்கடியில் பாரதிய ஜனதா



நாடாளுமன்ற தேர்தலுக்கு இன்னும் ஒரு ஆண்டு உள்ள நிலையில், அதற்கான ஆயத்தப் பணிகளை அரசியற் கட்சிகள் இப்போதே தொடங்கிவிட்டன. மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு மாற்றாக கருதப்படும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில், பிரதமர் வேட்பாளர் யார் என்பதில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் வெளிப்படையாக வெடித்துள்ளன.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முக்கிய அங்கமான ஐக்கிய ஜனதாத் தளம், நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதை வரும் டிசம்பருக்குள் அறிவிக்க வேண்டும், மதச்சார்பற்றவராக, அனைத்துப் பிரிவினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவராக அவர் இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது.

குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியைப் பிரதமர் வேட்பாளராக்க பாரதிய ஜனதாவில் ஆதரவுக் குரல்கள் அதிகரித்து வருவதை மனதிற் கொண்டே ஐக்கிய ஜனதாத்தளம் இவ்வாறு கெடு விதித்திருப்பதாக கருதப்படுகிறது.




ஐக்கிய ஜனதாத் தளத்தின் நிலைப்பாடு துரதிர்ஷ்டவசமானது என்று கூறியுள்ள பாரதிய ஜனதா, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டிய நேரத்தில், வீண் விவாதங்களில் ஆற்றலை விரயமாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயை மக்கள் தலைவர் என்று புகழ்ந்துள்ள ஐக்கிய ஜனதாத் தளம், அத்வானியை பிரதமர் வேட்பாளராக ஏற்பதில் பிரச்சினை இல்லை என்று தெரிவித்துள்ளது. இருப்பினும், குறிப்பிட்ட ஒருவரை மனதிற் கொண்டு தேசிய செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்வில்லை என்று அக் கட்சி விளக்கம் அளித்துள்ளது.

பிரதமர் வேட்பாளர், குறிப்பிட்ட ஒரு கட்சியின் தேர்வாக இல்லாமல் கூட்டணியின் ஒட்டுமொத்தத் தேர்வாக இருக்க வேண்டும் என்று சிவசேனா வலியுறுத்தியுள்ளது. பாரதிய ஜனதா சார்பில் பிரதமர் வேட்பாளரின் பெயர் முன்மொழியப்பட்ட பின்னரே, அதுகுறித்து முடிவு செய்யப்படும் என்றும் சிவசேனா கூறியுள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் முடிந்த பின்னர், கூட்டணியில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளும் இணைந்து பிரதமர் வேட்பாளரை தேர்வு செய்யலாம் என்பது தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மற்றொரு அங்கமான ஷிரோண்மணி அகாலிதளத்தின் கருத்து ஆகும்.

# புல்லரின் தூக்குத்தண்டனையை இரகசியமாக நிறைவேற்றத் திட்டம்

(பாட்டியாலா)



தீவிரவாதி புல்லரை இரகசியமாக தூக்கிலிட முடிவு செய்திருப்பதாக செய்தி பரவுவதால், அதனால் பஞ்சாப் முழுவதும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. டில்லியில் கடந்த 1993ஆம் ஆண்டு கார்க் குண்டு வெடிப்பு மூலம் 9 பேரைக் கொன்ற காலிஸ்தான் தீவிரவாதி புல்லருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து ஜனாதிபதியிடம் கருணை மனு அளிக்கப் பட்டது. ஆனால், அந்த மனு மீது முடிவு எடுக்க பல ஆண்டுகள் தாமதமானது. கருணை மனுவை பல ஆண்டுகள் கழித்து ஜனாதிபதி நிராகரித்ததால் தனது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற கோரி புல்லர் மேல் நீதிமன்றில் மனு செய்தார்.

இந்த நிலையில் தேவேந்தர் பால்சிங் புல்லரை சிறையில் மிக, மிக இரகசியமாக தூக்கில் போட ஏற்பாடுகள் நடந்து வருகிறது. புல்லரைத் தூக்கிலிடும் நாள் மற்றும் நேரத்தை சிறைத்துறை இரகசியமாக வைத்திருப்பதாக கூறப்படுகிறது. புல்லரைத் தூக்கில் போட்டால் பஞ்சாபில் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்படலாம் என்று கருதப் படுகிறது.

இதையொட்டி பஞ்சாப் முழுவதும் பாதுகாப்பைப் பலப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. பஞ்சாப் முழுவதும் துணை நிலை இராணுவ வீரர்களை ரோந்துப் பணியில் ஈடுபடுத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

# காங்கிரஸுடன் கூட்டணி இல்லை
# ஸ்டாலின் திட்டவட்ட அறிவிப்பு

(திருப்பத்தூர்)

சரியான தருணத்தில் காங்கிரஸ் கூட்டணியில் இருந்து விலகினோம். இனி காங்கிரஸுடன் கூட்டணி வைக்க மாட்டோம் என்று தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் கூறினார். தமிழகத்தை இருளில் வைத்துள்ள ஜெயலலிதா தற்போது மத்திய ஆட்சியின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் (பிரதமராகும் திட்டம்) இந்தியாவையே இருளில் மூழ்க வைக்க முடிவு செய்துள்ளார். நாடாளுமன்றத் தேர்தலை விரைவில் சந்திக்க உள்ளோம். அதற்கு தயாராக இருக்க வேண்டும்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் விழுந்த ஓட்டுச் சதவீதத்தை பட்டியலிட்டு, வரும் காலத்தில் தேர்தலைக் கவனத்துடன் சந்திக்க வேண்டும். மத்திய அரசு இலங்கைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் சரியான தருணத்தில் காங்கிரஸ் கூட்டணியில் இருந்து விலகினோம். இனி காங்கிரஸுடன் கூட்டணி வைக்கமாட்டோம் என்றார்.

# பெண்களின் அழகை வர்ணித்த அமைச்சரின் பதவி பறிபோனது



ராஜா ராம் பாண்டே. காமினி தனலட்சுமி

உத்தரப்பிரதேச மாநில அரசில் கதர்த்துறை அமைச்சராக ராஜாராம் பாண்டே இருந்தார். அவர் பொது இடங்களில் பெண்களின் அழகை வர்ணிப்பதையே ஒரு பழக்கமாக வைத்திருந்தார். கடந்த வெள்ளிக்கிழமை பிரதாப்கர் என்ற இடத்தில் நடந்த ஒரு பொது நிகழ்ச்சியில் பேசும் போது, நடிகைகள் ஹேமமாலினி, மாதுரி தீட்சித் ஆகியோரின் கன்னங்களைப் போல பளபளப்பாக சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்று பேசினார்.


இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அமைச்சரின் பேச்சுக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

இதைத் தொடர்ந்து, ராஜாராம பாண்டேவை அமைச்சரவையில் இருந்து முதல்வர் அகிலேஷ் யாதவ் அதிரடியாக நீக்கினார். முதல்வருடன் ஆலோசனை நடத்திய பின் அமைச்சரவையில இருந்து பாண்டேயை ஆளுநர் பி.எல்.ஜோஷி நீக்கியதாக அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜாராம் பாண்டே ஏற்கனவே, கடந்த பெப்ரவரி மாதம் சுல்தான்பூரில் நடந்த அரசு நிகழ்ச்சியில் பேசும் போது அந்த மாவட்டத்து பெண் கலெக்டரை மிக அழகானவர்கள் என்று வர்ணித்தார். மேடையில் கலெக்டர்களான காமினி, தனலட்சுமி ஆகியோரை இருக்கும் போதே அவர் அப்படி பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

# உள்நாட்டு பாதுகாப்புக் குறித்து மாநிலங்களின் கருத்து அவசியம்
## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் காவற்துறை சீர்திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளில் மாநில அரசுகளின் கருத்துகளை அறியவும் அதனை அமுல்ப்படுத்த ஒருமித்த கருத்து ஏற்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கபடுவதாக டில்லியில் நடைபெற்று வரும் முதலமைச்சர்களின் மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே கூறியுள்ளார்.

உள்நாட்டுப் பாதுகாப்பில் நாடு எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க மாநில அரசுகளின் கருத்துகள் அவசியம் என்றும் சுசில்குமார் ஷிண்டே தெரிவித்தார். கடந்த வருடம் செபரெம்பர் மாதம் சீர்திருத்த நடவடிக்கை தொடர்பான பரிந்துரைகள் குறித்து உங்கள் கருத்துகளை தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தேன். அதன்படி 15 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் பதிலளித்துள்ளன.



ஆகவே, பரிந்துரைகள் குறித்து உங்கள் கருத்துகளை அறிய இந்த ஒரு நாள் கருத்தரங்கு நடாத்தப்படுகிறது என்றும் சுஷில்குமார் ஷிண்டே தெரிவித்தார்.

## கடற்படை வீரர்கள் விவகாரம்
# இந்திய நிலைக்கு ஆதரவாக இத்தாலிய எழுத்தாளரின் புத்தகம்

இத்தாலிய கடற்படை வீரர்கள் விவகாரத்தில் இந்தியாவின் நிலைக்கு ஆதரவாக இத்தாலியைச் சேர்ந்த எழுத்தாளர் புத்தகம் எழுதியுள்ளார். கேரள கடற் பகுதியில் இந்திய மீனவர்கள் 2 பேரை இத்தாலிக் கடற்படை வீரர்கள் மசிமிலியானோ, சல்வடோர் ஆகிய 2 பேர் கடந்த ஆண்டு சுட்டுக் கொன்றனர்.

இது தொடர்பாக அவர்கள் கைது செய்யப்பட்டனர். இத்தாலியில் நடந்த தேர்தலில் வாக்களிக்கச் சென்ற அவர்கள் திரும்பி வரவில்லை. மத்திய அரசும் உச்ச நீதிமன்றமும் எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து இத்தாலி அரசு அந்த வீரர்களை திருப்பி அனுப்பியது. இந்த விவகாரத்தால் இரு நாடுகளின் உறவிலும் நெருடல் ஏற்பட்டது.



இந்நிலையில், இந்தியாவின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தி இத்தாலி எழுத்தாளர் மேட்டியோ மியாவல்டி என்பவர் இரண்டு கடற்படை வீரர்கள், உங்களிடம் சொல்லாத விடயம் என்ற தலைப்பில் புத்தகம் எழுதியுள்ளார். இத்தாலியைச் சேர்ந்த ஊடகங்கள் இத்தாலிக்கு ஆதரவாக ஒருதலைப்பட்சமாக இந்தப் பிரச்சினையில் செய்திகள் வெளியிடுவதாகவும் இந்தப் புத்தகம் அவர்களின் கண்களை திறக்கும் என்றும் மேட்டியோ கூறியுள்ளார். இந்தப் புத்தகம் நாளை இத்தாலியில் வெளியிடப்படுகிறது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## விண்வெளி வீரர்களை புற்றுநோய் தாக்கும் அபாயம்

(வோஷிங்டன்)

விண்வெளியில் பறக்கும் வர்ரகளுக்கு பெருங்குடற் புற்றுநோய் வருவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இது குறித்து ஜியார்ஜ்டவுண் லொம்பார்டி புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில், அண்டக் கதிர்வீச்சின் தாக்கம், எலியின் குடற் பகுதியில் ஆன்கோஜெனிக் புரதங்களை அழித்துவிடுவதாக தெரியவந்துள்ளது. அதுபடிப்படியாக பெருங்குடற் புற்றுநோயாக மாற சாத்தியமுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இந்த ஆய்வு நாசாவின் நிதியுதவியுடன் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் நாசா விண்வெளி வீரர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களைப் புற்றுநோயிலிருந்து காக்க பெரும் முயற்சிகள் எடுத்து வருவதாக விஞ்ஞானி சுபாங்கர் சுபன் தெரிவித்துள்ளார்.

மேலும் பேராசிரியர் தத்தா இதுகுறித்து தெரிவிக்கையில்,

நாங்கள் விண்வெளிப் பயணம் மேற்கொண்டால் கட்டாயம் புற்றுநோய் வரும் என்று கூறவில்லை. ஆனால் அதற்கான அதிகப்படியான சாத்தியக்கூறுகள் உள்ளன என கண்டறிந்துள்ளோம் என்று விளக்கமளித்துள்ளார்.

உலகச் செய்திகள்

## வடகொரியாவோடு பேச்சு; தயார் என்கிறது அமெரிக்கா

(டோக்கியோ)

வட கொரியாவோடு பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா தயாராக இருப்பதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில், வடகொரியா சர்வதேச சமூகத்திற்கு ஏற்கெனவே அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.




டோக்கியோவில் ஜப்பான் பிரதமருடனான சந்திப்பிற்கு பின் பேசிய கெர்ரி, வடகொரியா விடயத்தில் அனைத்து நாடுகளும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார். வடகொரியா நடத்தி வரும் அணு ஆயதங்கள் சோதனையானது அதன் அண்டை நாடுகளுக்கு மட்டுமல்லாது. அந்நாட்டு மக்களுக்கும் அச்சுறுத்தல் தரும் விடயமாகும் என்றும் தெரிவித்துள்ளார் கெர்ரி.

உலகில் எங்கும் போர் என்பதே கூடாது என்பதே அனைத்து நாடுகளின் விருப்பமும். எனவே இந்த விவகாரத்தில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனிடையே மேலும் வடகொரியாவைக் கடுமையாக தாக்கவும் ஜப்பான் தயாராகிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், நாங்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டால் முதலாவதாக ஜப்பான் தலைநகர் டோக்கியோவைத் தாக்கி அழிப்போம் என்று வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

## கறுப்புப் பட்டியலில் புடின் பெயர் மன்னிப்புக் கேட்டது பின்லாந்து



(மொஸ்கோ)

ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடினை பயங்கரவாத நடவடிக்கைகளில் தொடர்புடையவராக குறிப்பிட்டு கறுப்புப்பட்டியலில் பட்டியலிட்டதற்காக பின்லாந்து மன்னிப்பு கோரியுள்ளது.

பின்லாந்து நாட்டுக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பட்டியலில் ரஷ்ய ஜனாதிபதி புடினின் பெயரும் இடம்பெற்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனால் இரு நாடுகளிடையே பதற்றமான சூழல் உருவானது. இதைத் தவிர்க்கும் வகையில் பின்லாந்து புடினின் பெயரை கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கியதுடன் அவரிடம் மன்னிப்புக் கோரியது.

பின்லாந்தின் அமைச்சர் பைவி ரசனேன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், ரஷ்ய ஜனாதிபதி புடினின் பெயர் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. இதற்காக நாங்கள் மன்னிப்புக் கோருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

புடினின் பெயர் எப்படி கறுப்புப்பட்டியலில் இடம் பெறறது என்பது தொடர்பாக பின்லாந்து அரசு விசாரணை நடத்தி வருகிறது.

## தொடர்ந்து 62 மணிநேர நிகழ்ச்சி சாதனை படைத்த நேபாளியர்

(காட்மண்ட்)

நேபாள நாட்டைச் சேர்ந்த ரபி லமிச்சானே (வயது - 36). அமெரிக்காவில் உள்ள சங்கிலித் தொடர் உணவகத்தில் பணியாற்றும் இவர் தொடர்ந்து 62 மணி நேரம் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி நடத்தி உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம் பிடித்துள்ளார்.

"புத்தர் நேபாளத்தில் பிறந்தார்" என்ற தலைப்பில் இவர் நடத்திய தொடர் நிகழ்ச்சியில் நேபாள முன்னாள் பிரதமர், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், விளையாட்டுத் துறைப் பிரபலங்கள், தொழிலதிபர்கள், சமூக ஆர்வலர்கள் என பல துறையைச் சேர்ந்தவர்களும் பங்கேற்று தங்களது கருத்துகளை வெளிப்படுத்தினர்.



கடந்த 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு தொடங்கிய இந்தச் சாதனை நிகழ்ச்சியை 62 மணி நேரம் 11 நிமிடங்களுக்கு பிறகு இவர் நிறைவு செய்தார்.

கின்னஸ் விதிமுறைகளின் படி, ஒரு மணி நேரத்திற்கு 5 நிமிடங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளலாம். எனினும், ரபி லமிச்சானே அடிக்கடி ஓய்வெடுக்காமல் பல 5 நிமிடங்களை சேமித்துக்கொண்டு நீண்ட நேரம் ஓய்வெடுத்து இந்த சாதனையை நிகழ்த்தினார்.

## வெனிசுலா ஜனாதிபதித் தேர்தலில் சாவேஸ் ஆதரவாளர் வெற்றி


(கராக்ஸ்)

வெனிசுலாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளரும், இடைக்கால ஜனாதிபதியுமான நிகோலஸ் மதுரோ வெற்றி பெற்றார்.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் அதிபராக இருந்த ஹியூகோ சாவேஸ் (வயது - 58) புற்றுநோயால் அண்மையில் மரணம் அடைந்தார். அதைத் தொடர்ந்து புதிய அதிபர் தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது.

இந்தத் தேர்தலில் சாவேசின் ஆதரவாளர் நிகோலஸ் மதுரோ (வயது - 50), எதிர்க் கட்சி தலைவர் ஹென்ரிகியூ காப்ரிலேஸ் (வயது - 40) ஆகியோர் போட்டியிட்டனர். நேற்று முன்தினம் வாக்களிப்பு முடிந்ததும் வாக்கு எண்ணும் நடவடிக்கை தொடங்கியது. அதில், நிகோலஸ் மதுரோ வெற்றி பெற்றார்.

சாவேஸ் அதிபராக இருந்தபோதே நிகோலஸ் மதுரோ துணை அதிபராக இருந்தார் அவர் சிகிச்சைக்காக கியூபா



சென்றிருந்தபோது அதிபர் பொறுப்பைக் கவனிக்க இவரையே சாவேஸ் நியமித்து இருந்தார்.

அதுமட்டுமின்றி சாவேஸ் மறைவுக்கு பிறகு இடைக்கால அதிபராகவும் இவர் நியமிக்கப்பட்டிருந்தார். சாவேசின் சமூக புரட்சிக் கொள்கையை தாமும் தொடர்ந்து கடைபிக்கவுள்ளதாக நிகோலஸ் உறுதி அளித்துள்ளார்.

## "நெஸ்லே" உணவுப் பொருட்களில் குதிரை மாமிசக் கலப்பு

### - தவறை ஏற்றது நிறுவனம்

உலகில் தலைசிறந்த உணவுப்பொருள் தயாரிப்பு நிறுவனமான 'நெஸ்லே' தயாரிப்புகளில் குதிரை மாமிசம் கலப்படம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இந்த கலப்பட விசாரணைகள் காரணமாக நெஸ் லே நிறுவனம் இத்தாலி மற்றும் ஸ்பெயினில் உள்ள ஒப்பந்தக் கம்பனிகளிடமிருந்து பொருட்கள் வாங்குவதை நிறுத்தியுள்ளது தெரியவந்துள்ளது.

முதலில் இந்தக் குதிரைமாமிச கலப்புப் புகாரை மறுத்த நெஸ்ட்லே நிர்வாகம் தற்போது தவறை ஒப்புக் கொண்டுள்ளது.

இந்த விடயம் அம்பலத்திற்கு வந்துள்ளதால் குதிரை இறைச்சியைக் கலப்படம் செய்ததை நெஸ்லே ஒப்புக்கொண்டுள்ளது. இதனால் வியாபாரத்தை இது பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதென தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து நெஸ்ட்லே நிறுவனம் தெரிவிக்கையில்,

எங்கள் நிறுவனம் தரத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கும் வாடிக்கையாளர்களின் நலனே எங்களுக்கு முக்கியம் எனக் குறிப்பிட்டுள்ளது.

மேலும் எங்கள் நிறுவனத்திற்கு பொருட்கள் விநியோகிக்கும் இரண்டு கம்பனிகளின் பொருட்களில் கலப்படம் செய்யப்பட்டது தெரியவந்துள்ளதால் இந்த இரண்டு நிறுவனத்திடமிருந்தும் பொருட்கள் வாங்குவதை நிறுத்திவிட்டோம். எதிர்காலத்தில் இது போன்ற தவறுகள் நிகழாமலிருக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளது.

நெஸ்ட்லே நிறுவனம் இத்தாலி மற்றும் ஸ்பெயினில் உள்ள ஒப்பந்தக் கம்பனிகளிடமிருந்து பொருட்கள் வாங்குவதை நிறுத்தியுள்ளது என்றாலும் கலப்பட உணவுப் பொருட்கள் பற்றித் தான் இப்போது அதிகமாக அடிபடுகிறது.

நெஸ்ட்லே நிறுவனத்தின் தயாரிப்பான பாஸ்தாவில் குதிரை இறைச்சி 1 சதவிகிதம் கலந்துள்ளது என ரி.என்.ஏ ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

முதலில் இந்த குதிரை மாமிசக் கலப்புப் புகாரை மறுத்த நெஸ்ட்லே நிர்வாகம் தற்போது தவறை ஒப்புக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



மியான்மரின் நைபிடவ் நகரில் நடைபெற்ற தண்ணீர்த் திருவிழாவில் அதிபர் தேய்ன் செய்ன் கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண்கள் மீது தண்ணீர் தெளிக்கும் தேய்ன் செய்ன்.

# வாழ்வியல் பிரச்சினைகள் வரணி இடைக்குறிச்சியில் அதிகம்

## மனம் திறந்து பேசும் பொதுமக்கள்



வரணி இடைக்குறிச்சி பகுதியில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரினின் விசேட குறைகேள் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இக் கலந்துரையாடலின் போது மலசல கூடமின்மை, வீட்டுத்திட்டப் பிரச்சினை, வீதிகள் புனரமைப்பின்மை, வேலைவாய்ப்பு சம்பந்தமான விடயங்கள், குடிநீர்ப் பிரச்சினை, குளங்கள் புனரமைப்பு போன்ற விடயங்களைப் பொதுமக்களுடன் தனித்தனியாகக் கலந்துரையாடி ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் இவற்றுக்கான தீர்வுகள் விரைவில் பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அனைத்துக்குமான தீர்வு விரைவில் பெற்றுத்தரப்படும் எனத்தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் தென்மராட்சி பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இரகுநாதன், கிராம அலுவலர் தீபா கொடிகாம ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி இணைப்பாளர் விஸ்வா, சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மணற்காடு அம்மனுக்கு புதிய திருப்பணிகள்

(யாழ்.நிருபர்)

காரைநகரில் உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயமான மணற்காடு குடும்ப நாயகி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் நீண்டகாலமாக புனருத்தாரணம் செய்யப்படாத நிலையில் நீதிமன்ற அனுமதியுடன் புதிய திருப்பணிச்சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அம்பாளுக்கு புதிய இராஜ கோபுரம் மற்றும் மணி மண்டபம் அமைத்தல் ஆலய உட்பிரகார புனர்நிர்மாணம் என்பவற்றை இத்திருப்பணிச் சபையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்ற மணற்காடு முத்துமாரி அம்பாள் வருடாந்த மஹோற்சவத்தில் இலங்கையின் பல்வேறு பாகங் களிலிருந்தும் புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான அடியார்கள் கலந்து கொண்டதோடு திருப்பணிக்கும் பெருமளவில் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

அம்பாளின் இரதோற்சவ நிகழ்வுகளை யாழ்.எவ்.எம். வானொலியில் காரைமண் ஈன்ற புதல்வர்களான தமிழருவி சிவகுமாரன், மதுரகவி அருளானந்தன், ஊடகவியலாளர் கணேசமூர்த்தி ஆகியோர் தொகுத்து வழங்கியிருந்தனர். (10)

# வவுனியாவில் காணி சுவீகரிப்பு மாவட்ட செயலகம் நடவடிக்கை

(வவுனியா)

வவுனியாவில் தனியார் காணிகள் சிலவற்றை சுவீகரிப்பதற்காக வவுனியா மாவட்டச் செயலகம் சட்டபூர்வமான நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறது. இந்த நடவடிக்கை முற்றுலுமாக அரசாங்க சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடைபெற்று வருகிறது.

இராணுவத்தினரின் 56 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்தினை நிறுவுவதற்கென வவுனியாவில் தனியார் காணி சுவீகரிக்கப்படுவதாக வவுனியா, மன்னார் மாவட்ட காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் ந.திருஞானசம்பந்தர் அறிவித்தல் ஒன்றினை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் திருத்த சட்டத்தின் படி திருத்தப்பட்டவாறான காணி கொள்ளும் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் காணி அமைச்சர் உத்தரவிட்டதன் பிரகாரம் பொதுத் தேவைக்கென காணி சுவீகரிக்கப்படுவதாக பொது மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இதன் நிமிர்த்தம் வவுனியா மாவட்டத்தில் நொச்சிமோட்டை கிராம அலுவலர் பிரிவில் பேயாடிகுழாங்குளம் கிராமத்தில், பேயாடிகுளம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 20 ஏக்கர் காணி 56 ஆவது படைப் பிரிவின் தலைமையகத்திற்காகச் சுவீகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இக் காணிகளின் உரிமை கோருவோர் என நடராஜா, கேதீஸ்வரன், ஆர். நாகேஸ்வரன், எம்.அமிர்தநாயகி, சண்முகநாதன், உமாபதி, எஸ். சிறிஸ்கந்தராசா, என். சிறிஸ்கந்தராசா ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உதவித் திட்டங்களில்...

பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து இந்த யோசனையை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மிகத்தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.

இலங்கைக்கு அளித்து வரும் நிதியுதவில் 20 சதவீதத்தைக் குறைக்க வேண்டுமென்ற பரிந்துரையை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அமெரிக்க நாடாளுமன்றத்திலும் சமர்பித்துள்ளார்.

உள்நாட்டுப் போர் முடிந்த பிறகும் மனித உரிமை மீறல் அதிகரித்து வருவதாலும், மறுசீரமைப்பு மற்றும் அரசியல் நடவடிக்கைகள் மேம்படுத்தப் படாததாலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் வட, கிழக்குப் பகுதியில் போரால் இடம்பெயர்ந்த மக்களுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த அமெரிக்கா முயற்சி மேற் கொண்டபோதிலும், அதற்கு பலன் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு செயல்படுத்தப்படும் திட்டங்களில் வெளிச்சக்திகளின் தலையீடு அதிகமாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

அதனால், அடுத்தாண்டு இலங்கைக்கு வழங்க உத்தே சிக்கப்பட்டிருந்த 8 பில்லியன் டொலர் நிதியுதவி, 6 பில்லியன் டொலராக குறைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அமெரிக்கா அளித்து வரும் நிதியுதவியில் பெருமளவு, நிதித்துறை சீர்திருத்தங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. பங்களாதேஷிற்கான நிதி உதவியையும் குறைத்துள்ள அமெரிக்கா, மாலைதீவிற்கான நிதியுதவியை அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்து கோப்பாயில் சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் இராசவீதியில் வீதி திருத்த வேலைக்குப் போடபபட்டிருந்த சல்லிக்கல்லின் மீது பயணம் செய்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முற்பகல் விபத்திற்கு உள்ளாகியதில் அதில பயணம் செய்த சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கோப்பாயைச் சேர்ந்த வைரவதாஸ் கௌரிசங்கர் (வயது-10) என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளார்.

இவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறுவன் அவரது உறவினருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருக்கையில் வீதித் திருத்த வேலைக்காகப் பறிக்கப்பட்டிருந்த சல்லிக்கற்கள் மீது மோட்டார் சைக்கிளில் சென்ற போது ரயர் காற்றுப் போகவே மோட்டார் சைக்கிள் விப்த்திற்குள்ளாகியதாலேயே சிறுவன் வீழ்ந்து தலையில் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. (பா)

## அதிவேக நெடுஞ்சாலை குவிகிறது வருமானம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று திங்கட்கிழமை காலை 7.00 மணியுடன் நிறைவடைந்த 12 மணி நேரத்திற்குள் 5 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

குறித்த 12 மணிநேரத்திற்குள் இந்த நெடுஞ்சாலையை 18 ஆயிரத்து 300 வாகனங்கள் பயன்படுத்தியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிபந்தனையற்ற...

தெரிவித்துள்ளது.

எமது ஒத்துழைப்பு உதவிக்கான கேள்வியின் அடிப்படையிலேயே அமையும். அது பங்காளி நாடுகளின் முன்னுரிமை விருப்புகளுக்கு ஏற்பவே இருக்கும். நாம் உதவிகளை நிபந்தனைகளோடு இணைப்பதில்லை. நாம் அவற்றுக்காக கொள்கைகளை வகுக்கப்போவதுமில்லை.

நாம் இந்த நாடுகளின் இறைமைக்கு சவாலாக இருப்பதுமில்லை. நாம் அபிவிருத்தி அனுபவங்கள், மூலவளங்களை பரிமாறிக்கொள்வதை ஊக்குவிக்கின்றோம் என இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற தென், தெற்கு ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, தெற்கு ஒத்துழைப்புக்கு தென், தெற்கு ஒத்துழைப்பு பிரதியீடாக இருக்க முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கடந்த 10 வருடங்களில் சலுகை அடிப்படையில் இந்தியா 9.5 பில்லியன் அமெரிக்க டொலரை இந்தியா பல்வேறு வகைப்பட்ட திட்டங்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

## கூட்டமைப்பும்...

தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது குற்றஞ்சாட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசியல் தஞ்சம் கோருவதற்காகவும், மக்களிடம் அனுதாபம் பெறுவதற்காகவுமே இப்படியான தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளைத் துரித கதியில் நடத்துமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

பி.பி.சி.யின் செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளும், உதயன் பத்திரிகையின் செயற்பாடுகளும் கடந்த கால வன்முறைகளுக்குத் துணை போவது போல் அமைந்துள்ளதென அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடமாகாணத்தில் தேர்தல் நடத்தப்பட இருப்பதால் சிலர் தங்களுக்கு தாங்களே தாக்குதல் நடத்தி அனுதாபம் தேடிக் கொள்ளும் முயற்சியாகவும் இது இருக்கலாம் எனவும் வரலாற்று அனுபவத்தில் தாம் இதைக் கண்டிருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கில் வன்முறைகளற்ற தனிநபர் சுதந்திரத்தை பேணக் கூடிய சமூகமொன்று உருவாக வேண்டும் என்பதே எமது விருப்பம் எனவும் அவர் அந்த விசேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

# கோத்தாபய மட்டக்களப்புக்கு

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மட்டக்களப்பு மாவட்டத்திற்கு எதிர் வரும் 18ஆம் திகதி விஜயம் மேற்கொள்ளவுள்ளார். அந்த விஜயத்தின் போது தொப்பிகலையில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத் தூபியை அவர் திறந்து வைப்பார்.

தொப்பிகலைப் பிரதேசம் புலிகள் இயக்கத்திடமிருந்து மீட்டெடுக்கப்பட்டதன் நினைவாக அங்கு நினைவுத்தூபியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவுத்தூபியையே பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ திறந்துவைக்கவுள்ளதாக தொப்பிகலை பிரிகேட் படையினர் கூறினர். தமிழ் சிங்கள புத்தாண்டின் பின்னர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ முதல் தடவையாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கடலில்...

உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறைப் பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02,50)

# இந்திய இழுவைப் படகுகளுக்கு ஓய்வு

## அத்துமீறிய மீன்பிடியும் இல்லை

## பிரச்சினைக்குத் தீர்வு தேடுமா தமிழகம்

(கொழும்பு)

தமிழகத்தில் நேற்று திங்கட்கிழமையிலிருந்து அமுல்படுத்தப்பட்டுள்ள 45 நாட்கள் மீன்பிடித தடை காலத்தின் போது இரு நாட்டு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டுமென இராமேஸ்வர கடற்றொழிலாளர்கள் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

கடல் மீன் வளத்தை பேணுவதற்காக மே மாதம் 29 ஆம் திகதி வரை மீன்பிடித்தடை அமுல்படுத்தப்படவுள்ளது. இதன் பின்னர் இலங்கை கடற்படையின் பயமுறுத்தலுக்கு மத்தியில் தமது தொழிலை தொடரமுடியுமா என்பதையிட்டு இராமேஸ்வரம் மீனவர்கள் முடிவெடுக்க முடியாமல் உளளனர்.

இந்த மீன்பிடித்தடை காலத்தின் போது தமது பிரச்சினைக்கு நிரந்தரதீர்வு காணப்படவேண்டும் அல்லது தமது வாழ்க்கைக்கு தேவையான வருமானத்தை ஈட்ட மாற்றுவழி வழங்கப்படவேண்டுமென தமிழ்நாட்டு கடற்றொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் பி.சேஸுராஜா கூறினார்.

இந்த தடைக்காலத்தின் போது 3000 இயந்திர படகுகள் நங்கூரமிடப்பட்டிருக்கும். இதன் போது 40000 கடற்றொழிலாளர்கள் குடும்பங்களுக்கு மாநில அரசாங்கம் மாதாந்தம் 2000 ரூபா உதவி வழங்கும்.

மீனவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கத்துடன் பேசி ஒருதீர்வை காணவேண்டும் இல்லாது விடின் மீனவர்களின் படகை அரசாங்கம் விலைக்கு வாங்க வேண்டுமென சேஸுராஜா கூறினார்.

ஆரசாங்கம் தமக்கு நியாயமான நட்டஈடு வழங்குமாயின் 300 மீனவர்கள் தமது படகுகளை விற்றுவிட்டு கடற்றொழிலை கைவிடத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

## அனர்த்தகால முதலுதவி மாணவர்களுக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் திட்டமிடலின கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட ஆறு பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் அனர்த்த காலங்களில் செயறபடும் விதமாக முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேலிங்கம் என். இலங்கேஸ்வரன் ஆகியோர் இந்த பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கினார்.

இந்தப் பயிற்சிகளின் மூலமாக அனர்த்த காலங்களில் அல்லல்படும் மக்களுக்கு இவர்கள் முதலுதவி சேவையை வழங்கவுள்ளனர். மேலும் அனர்த்த காலங்களில் இவர்கள் செயற்படுவதில் மேலும் சில பயிற்சி நெறிகளும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி இடைக்காடு ம.வி. சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம், அராலி இந்துக்கல்லூரி, அராலி சரஸ்வதி வித்தியாலயம், வட்டு இந்துக்கல்லூரி, விக்டோரியாக் கல்லூரி என்பவற்றின் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கே பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## களைகட்டுகிறது கசூரினா கடற்கரை



(யாழ்.நிருபர்)

காரைநகர் "கசூரினா பீச்" என்றழைக்கப்படும் சுற்றுலா மையத்திற்கு வருகைதரும் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது.

பாடசாலை விடுமுறை, மற்றும் தமிழ், சிங்கள புத்தாண்டு விடுமுறை தினங்களை மகிழச்சியுடன் கழிப்பதற்காகவே பெருந்தொகையானோர் குடும்ப சகிதமாக இக் கடற்கரைக்கு வருகை தருகின்றனர்.

இங்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மலசலகூட வசதிகள் மற்றும் குடிநீர் உணவக விடுதி வசதிகள் போதாமையினால் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

கடற்கரையில் மதுப்பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்ட நிலையில் கடற்கரைக்கு அப்பால ஒழுங்கை, தெருக்களிலும் ஓட்டோ மற்றும் வான் முதலிய வாகனங்களிலும் மரங்களின் கீழும் இளைஞர்கள் மது அருந்தி மகிழவதைக் காணமுடிகின்றது.

மதுபோதை தலைக்கேறிய நிலையில் சில விஷமிகள் தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டு வாங்கிக்கட்டும் சந்தர்ப்பங்களும் இடம்பெறுகின்றது. (10)

## கசூரினா கடற்கரையில் குழுமோதல் ஒருவர் மூன்று பற்களை இழந்தார்

காரைநகர் கசூரினா கடற்கரையில் குளித்துக்கொண்டிருந்த இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் மூன்று பற்களை இழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் கசூரினா கடற்கரையில் நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் நாவாந்துறையைச் சேர்ந்த 17 பேர் கொண்ட குழுவினரும், ஆரியகுளத்தைச சேர்ந்த 11 பேர் கொண்ட குழுவினரும் குளித்துக்கொண்டிருந்த போது இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது தாக்குதலுக்கு உள்ளான ஒருவர் தமது மூன்று பற்களை இழந்துள்ளார். இதில் தாக்குதல் நடத்தியவரும் கையில் காயமடைந்துள்ளார். இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார் இரு குழுக்களையும் சமரசம் செய்துவைத்ததுடன் பற்களை இழந்தவருக்கு 40 ஆயிரம் ரூபா இழப்பீடும் பெற்றுக்கொடுத்துள்ளனர். (50)

## இளைஞர் நாடாளுமன்றம்; கோரப்படுகிறது விண்ணப்பம்

(யாழ். நிருபர்)

ஸ்ரீலங்கா இளைஞர்கள் இரணடாவது நாடாளுமன்றத்திற்காக செனட் சபை உறுப்பிர்களைத் தேர்வு செய்வதற்காக 17-29 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளிடமிருந்து தேசிய இளைஞர் சேவைகள மன்றம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மட்டமொன்றில (க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம்) கல்வியில் தேர்ச்சி பெற்றவராயும், மாவட்ட தேசிய மட்டத்தில் இளைஞர் அமைப்புக்கள் சனசமூக அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டவராயிருத்தல் வேண்டும்.

ஒரு வருடத்திற்கு ஸ்ரீலங்கா யூத் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்படக்கூடியவராயும் ஒழுக்கசீலராக இயங்குபராயும் இருத்தல் வேண்டும்.


மாவட்ட மட்ட பிரதிநிதித்துவத்திற்கான விண்ணப்பங்கள் யாவும் தான் பிரதிநிதித்துவம் செய்கின்ற மாவட்டத்தின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின மாவட்டக் காரியாலய உதவிப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

தேசிய மட்ட பிரதிநிதித்துவத்திற்கான விண்ணப்பங்கள் யாவும தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். (10)

## புத்தாண்டுச் சவாரி வீதி விபத்தில் 10 பேர் பலி

கடந்த 48 மணி நேர காலப் பகுதியினுள், இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 10 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது. அனுராதபுரம், கெக்கிராவ, காலி, ஹங்வெல்ல, அஃஹங்கல்ல, காட்டகஸ்திரிய மற்றும் கம்பஹா ஆகிய பிரதேசங்களிலேயே அதிக அளவிலான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. பண்டிகை காலப்பகுதியினில், 'பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது 312 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் முதல் நேற்று மாலை வரையான காலப்பகுதியினில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இது தவிர, நாடளாவிய ரீதியாக மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் மற்றும் வீதிசட்ட திட்டங்களை மீறுபவர்கள் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை, கொழும்பு தேசிய மருத்துவமனையின் தரவுகளின்படி 480 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப பட்டனர்.

## ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் புனே அணி 24 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.



ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் 19 ஆவது லீக் நேற்று இரவு 8.00 மணிக்கு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் தொடங்கியது. இதில் சென்னை - புனே அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற புனே அணி துடுப்பெடுத்தாட முடிவெடுத்தது. இலங்கை வீரர்கள் சென்னையில் விளையாட அனுமதிக்காததால் மாத்யூஸ் இன்றைய போட்டியில் பங்கேற்கவில்லை. அவருக்குப் பதிலாக டெய்லர் கப்டன் பதவி வகிததார்.

புனே அணியின் தொடக்க வீரர்கள் பின்ச் - உத்தப்பா சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். பின்ச் 45 பந்தில் 2 சிக்சர், 10 பவுண்டரி உட்பட 67 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். உத்தப்பா 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த டெய்லர் 8, மார்ஷ் 2, பாண்டே 9 ஓட்டங்கழில் ஆட்டமிழந்தார். ஆனாலும், சுமித் 16 பந்தில் 39 ஓட்டங்கள் அடிக்க புனே வாரியர்ஸ் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 159 ரன்கள் எடுத்தது.

தொடந்து விளையாடிய சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களாளை மட்டுமே எடுக்க முடிந்தது.


## உடனடி வேலைவாய்ப்பு

தினமுரசு காரியாலய இயந்திரப் பகுதியில் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

SORD, KORD அச்சு இயந்திரங்களை இயக்கக் கூடிய அனுபவமுள்ளவர்கள் மற்றும் பழக விருப்பமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் சமூகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்
தினமுரசு


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.